விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu ———————— ඊළනාඩු

வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 | மலர் : 01 | 19.04.2021 திங்கட்கிழமை | இதழ் : 139 | பக்கங்கள் : 16




# உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணியில் பெரும் அரசியல்

## மதத் தீவிரவாதம் காரணம் அல்ல என்கிறார் கர்தினால்

கொழும்பு, ஏப்ரல் 19

“உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மதத் தீவிரவாதத்தினால் நடத்தப்பட்டதல்ல. அரசியல் அதிகாரத்தைப் பலப்படுத்துவதை இலக்காகக் கொண்டே இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது” என பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்திருக்கின்றார். 15





## முல்லைத்தீவு காட்டுக்குள் புலிகளின் ஆயுதங்கள் மீட்பு

முல்லைத்தீவு, ஏப். 19

முல்லைத்தீவு சாலை காட்டுப்பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளினுடைய ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். 15

## மேலும் 287 பேருக்கு கொரோனா தொற்று

கொழும்பு, ஏப்.19

இலங்கையில் மேலும் 287 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இவர்களில் அதிகமானோர் ஏற்கனவே கொரோனா தொற்றுக்குள்ளானவர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் என இராணுவத் தள 15

## கொரோனாவால் 618 ஆவது மரணம்

கொழும்பு, ஏப்.19

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மேலும் ஒருவர் உயிரிழந்தார் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உறுதிப்படுத்தினார்.

இதன்படி, நாட்டில் கொரோனா தொற்றுக் குள்ளாகி உயிரிழந்தோ 15

### யாழ்.பல்கலையில் மீளமைக்கப்பட்ட

## முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி ஏப்ரல் 23 ஆம் திகதி திறக்கப்படும்

யாழ்ப்பாணம், ஏப். 19

யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் மீளவும் அமைக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி வரும் ஏப்ரல் 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்களின் அழைப்பில் துணைவேந்தர், பேராசிரியர் சிறி சற்குணராஜா இதனைத் திறந்துவைக்கவுள்ளார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த 15

## திருநெல்வேலி வர்த்தகர்கள், பணியாளர்கள் 11 பேர் உட்பட வடக்கில் 14 பேருக்கு தொற்று

யாழ்ப்பாணம், ஏப். 19

திருநெல்வேலி பொதுச் சந்தை மற்றும் அதனை அண்டியுள்ள வர்த்தக நிலையங்களின் வர்த்தகர்கள், பணியாளர்கள் 11 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் மேலும் 14 பேருக்கு கொரோனா தொற்று உள்ளமை நேற்று ஞாயிற்றுக்கிழமை கண்டறியப்பட்டுள்ளது என்று வடமாகாண 15

## வடக்கு உட்பட 03 மாகாணங்களில் கொரோனா தொற்று அதிகரிக்கலாம்

### சுகாதார பரிசோதகர் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 19

பண்டிகை காலத்தைத் தொடர்ந்து வடக்கு உள்ளிட்ட மூன்று மாகாணங்களில் கொரோனா தொற்று நோயாளர் தொகை அதிகரிக்கக்கூடும் என பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கம் எச்சரித்துள்ளது.

வடக்கு மாகாணம், மேல் மாகாணம் மற்றும் வடமேல் மாகாணங்களில் தொற்று 15

## 20ம் திருத்தத்தை ஆதரித்த எம்.பி.க்கள் ‘பாவமன்னிப்பு’ பெறுவதற்கு சந்தர்ப்பம்

### மனோ கணேசன் தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 19

“20 ஆம் திருத்தத்துக்கு ஆதரவாக அணி மாறி வாக்களித்த தமிழ் பேசும் எம்பீக்களுக்கு, நாம் இந்த சட்டமூலங்களுக்கு ஆதரவளிக்க ”மாட்டோம், மாட்டோம்” என இரண்டு முறை தாம் இப்போது அங்கம் வகிக்கும் அரசுக்கு இடித்துக் கூறி, பாவமன்னிப்பு பெற சந்தர்ப்பம் வருகிறது என தமிழ் முற்போக்கு கூட்டணி, ஜனநாயக மக்கள் முன் 15

## கொரோனாவின் ஆட்டத்தை நாங்கள் அடக்கிவிட்டோம்!

### சுகாதார அமைச்சர் பெருமிதம்



கொழும்பு, ஏப். 19

நாட்டில் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை அரசாங்கம் வெற்றிகரமாக நிர்வகித்துள்ளதாக சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியராச்சி தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சக வளா 15



05 கூட்டமைப்பின் வடக்கு எம்.பிக்கள் அரசின் அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு



06 நாட்டில் புதிய மாநிலம் உருவாகுவது தெளிவு!



11 இலங்கை ஹொங் கொங் அல்ல சீனா ஒருபோதும் ஆள முடியாது



12 ஒரு பக்கம் கொரோனா மறு பக்கம் வறுமை!

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20ம் திருத்தத்தை...

னணி தலைவர், முன்னாள் தேசிய ஒரு மைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக மேம்பாடு, இந்து கலாச்சார அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மனோ எம்பி மேலும் கூறியுள்ளதாவது,

இன்றைய அரசாங்கம், பாராளுமன் றத்தில் இரண்டு சட்ட மூல மசோதாக் களை கொண்டு வந்து நாட்டையும், இந்நாட்டில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்களையும் ஆபத்தில் போட திட்ட மிடுகிறது. இந்த ஆபத்துகள் இன்று எம் கண் முன்னே தெரிகின்றன.

ஒன்று, நமது தமிழ் பேசும் மக்களின் பாராளுமன்ற பிரதிநிதித்துவங்களை அழித்து, ஒழிக்கும் உத்தேச இரகசிய திட்டமிடலும், முயற்சியும் ஆகும். அதா வது, இந்நாட்டில் இன்றுள்ள தேர்தல் முறை சட்டங்களை திருத்தியமைக்க, இவர்கள் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் கொண்டுவர திட்டமிடும் சட்டமாகும்.

இரண்டாவது, இந்நாட்டில் நிலவும் சட்டங்களிலிருந்து விலக்களித்து, சீன நாட்டுக்கு விசேட சலுகைகளை அளித்து, கொழும்பு தலைநகரை ஒட்டி, மேற்கு கரையில் அமைகின்ற, தனியொரு நிர்வாகம் கொண்ட "துறைமுக நகர்" ஆகும்.

இந்நாட்டில் தமிழ் மக்களின் ஜனத் தொகையில் 50 விகிதமும், முஸ்லிம் மக்களின் ஜனத்தொகையில் 65 விகிதமும், வடக்கு கிழக்கு மாகாணங் களுக்கு வெளியே, தென்னிலங்கையில் வாழ்கிறார்கள். இப்படி பரவி, விரவி வாழும் தமிழ் பேசும் சிறுபான்மை மக் களின் பாராளுமன்ற மற்றும் மாகாண சபை பிரதிநிதித்துவங்களை இல்லாமல் ஒழிக்கும் புதிய தேர்தல் முறைமையை, இன்றைய அரசின் பிரதான கட்சியான பொதுஜன பெரமுன கொண்டு வர முயல்கிறது.

அதிஷ்டவசமாக, இன்று அரசின் உள்ளே இருக்கும் பங்காளி சிறுகட்சி களின் இருப்பையும் இந்த புதிய தேர்தல் முறை யோசனைகள் சவாலுக்கு உட்படுத்து கின்றன. ஆகவே அரசுக்கு உள்ளே இருக் கும், சிங்கள மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் சிறு பங்காளி கட்சிகள் இதை அரசுக்கு உள்ளேயே இருந்து எதிர்க்கின் றன. நாளை இந்த கட்சிகள் பிரதமர் மஹிந்த ராஜபக்சவுடன் இது தொடர் பில் கலந்துரையாடுகின்றன.

ஆனால், அரசின் உள்ளே இருக்கும் தமிழ், முஸ்லிம் பங்காளி கட்சியினரும், 20ம் திருத்தத்துக்கு ஆதரவாக அரசு பக் கம் தாவிய எம்பீக்களும் அமைதி காக் கின்றனர். இது இன்று தமிழ் பேசும் மக் களின் சாபக்கேடாக இருக்கிறது.

இன்று இருக்கும் தமிழ் பேசும் எம் பீக்கள், அமைச்சர்கள் நாளை இல்லாமல் போகலாம். ஆனால், இந்த நாடு இருக் கும். இந்நாட்டில் வாழும் தமிழ், முஸ் லிம் மக்கள் வாழத்தான் போகிறார்கள். இந்த உத்தேச தேர்தல்முறை மாற்ற முயற்சி, 20ம் திருத்தத்தை விட மிக மிக ஆபத்தானது. எமது மக்களின் இருப்பை இந்நாட்டில் இல்லாமல் செய்யும் உள் நோக்கம் கொண்டது.

ஆகவே எதிர்காலத்தில் எமது தமிழ், முஸ்லிம் இனங்களின் பிரதிநிதித்து வங்களை இல்லாமல் செய்யும் சட்ட மூலங்களுக்கு முட்டாள்தனமாக கையை தூக்கி, வரலாற்றின் சாபத்துக்கு மீண்டும் ஒருமுறை உள்ளாக வேண்டாம் என சம்பந்தபட்டவர்களுக்கு கூறி வைக்க விரும்புகிறேன்.

கடந்த அரசில் பங்காளி கட்சி அமைச் சர்களாக நாம் இருக்கும் போது, நமது மக்களின் இருப்புக்கு ஆபத்து வரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நாம் உரக்க குரல் கொடுத்து அரசுக்கு உள்ளேயே சண்டையிட்டு, எமது இருப்பை உறுதி செய்தோம் என்பதையும் இங்கே நான், தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலை வர் என்ற முறையில் பெருமையுடன் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

அதேபோல், அடுத்த தேசிய ஆபத்து, சீன நாட்டுக்கு விசேட சலுகைகளை அளித்து, இந்நாட்டில் நிலவும் சட்டங் களிலிருந்து விலக்களித்து, கொழும்பு தலைநகரை ஒட்டி, மேற்கு கரையில் அமைக்கின்ற தனியொரு நிர்வாகம் கொண்ட "துறைமுக நகர்" ஆகும். இதற்கான விசேட வர்த்தமானி பிர கடனம் வெளியாகி விட்டது.

நாளை பாராளுமன்ற கட்சி தலைவர் கூட்டத்தில், இது தொடர்பில் பேசப் படும். நீதிமன்ற தீர்ப்புகளுக்கு பின் இந்த சட்டமூலம் பாராளுமன்றம் வருமா, இல்லையா, வருமானால், வரும் திகதி என்பவை மீண்டும் கட்சி தலைவர்கள் கூடி முடிவு செய்வோம்.

இந்நிலையில், 20ம் திருத்தத்துக்கு ஆதரவாக அணி மாறி வாக்களித்த தமிழ் பேசும் எம்பீக்கள் ஒன்று கூடி, சிறு பான்மை மக்களின் பிரதிநிதித்துவங் களை ஒழிக்கும் தேர்தல் முறைக்கு ஆதர வாக நாம் வாக்களிக்க மாட்டோம் என் றும், துறைமுக நகரை சீனாவுக்கு தாரை வார்க்கும் சட்டமூலத்துக்கு ஆதரவாக நாம் வாக்களிக்க மாட்டோம் என்றும், தாம் இன்று அங்கம் வகிக்கும் அரசுக்கு உறுதியாக இடித்துரைக்க வேண்டும் என நான் இந்நாட்டின் தமிழ், முஸ்லிம் மக் களின் சார்பாக கேட்டுக்கொள்கிறேன்.

## கொரோனாவின்...

கத்தில் ஊடகங்களிடம் பேசிய அமைச் சர் வன்னியராச்சி, அரசாங்கத்தின் கொரோனா கட்டுப்பாட்டுத் திட்டத் தில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை நிராகரித்தார்.

உலகம் மூன்றாவது கொரோனா அலை களை எதிர்கொள்கிறது, அதே நேரத்தில் இந்தியாவில் தினமும் 200,000 க்கும் மேற்பட்ட தொற்றாளர்கள் அடை யாளம் காணப்படுகிறார்கள்.

அரசாங்கம் தகுந்த நடவடிக்கைகளை எடுத்துள்ளதால், தினசரி பதிவாகும் தொற் றாளர்களின் எண்ணிக்கை மற்றும் தொடர் புடைய இறப்புகள் கணிசமாகக் குறைந்து விட்டன என்று சுகாதார அமைச்சர் கூறி னார்.

தொற்றிலிருந்து மீண்டு வருபவர் களின் எண்ணிக்கையும் படிப்படியாக அதிகரித்துள்ளது என்று அமைச்சர் வன்னியராச்சி குறிப்பிட்டார்.

எனவே கொரோனா நெருக்கடியை வெற்றிகரமாக சமாளிக்கும் முயற்சிகளில் அரசாங்கம் தோல்வியுற்றது என்று யாரும் கூற முடியாது என்று அவர் கூறினார்.

அரசாங்கத்தின் தடுப்பூசி திட்டத்தின் மீது இதேபோன்ற குற்றச்சாட்டுகளை எதிர்கட்சி சுமத்தியது, இது தவறானது என்று நிரூபிக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

## திருநெல்வேலி...

சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத் துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை ஆய்வுகூடம் மற்றும் ஆய்வு கூடத்தில் 386 பேரின் மாதிரிகள் நேற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

14 பேருக்கு தொற்று உள்ளமை கண் டறியப்பட்டுள்ளது.

உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவர் அடையாளம் காணப் பட்டுள்ளனர். அவர் சுயதனிமைப்படுத் தலில் உள்ளவர்.

திருநெல்வேலி பொதுச் சந்தை மற் றும் அதனை அண்டியுள்ள வர்த்தக நிலையங்களின் வர்த்தகர்கள் மற்றும் பணியாளர்கள் சுயதனிமைப்படுத்தலில் வைக்கப்பட்டிருந்தனர். அவர்களிடம் நேற்று முன்னெடுக்கப்பட்ட இரண்டா வது பி.சி.ஆர் பரிசோதனையில் 11 பேருக்கு தொற்று உள்ளமை உறுதிப் படுத்தப்பட்டது.

யாழ்.போதனா வைத்தியசாலை தனி மைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கு கோரோனா தொற்று உள் ளமை கண்டறியப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் ஒருவருக்கு கோரோனா தொற்று உள்ளமை கண்டறி யப்பட்டது. அவர் சுயதனிமைப்படுத் தலில் இருந்தவர்" என்றும் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத் துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

# திருமலை துறைமுகத்தை இன்னொரு நாடு கோரும் நிலை உருவாகலாம்

## ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, ஏப். 19

வெளிநாடுகள் இலங்கையில் நிரந்தர மாக காலூன்றுவதற்கு அரசாங்கம் அனு மதியளித்துள்ளது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார். அரச வளங்களை பாதுகாப்போம் என தெரிவித்து ஆட்சிக்குவந்த அரசாங்கம் தற்போது அரச வளங்களை விற்பனை செய்துவருகின்றது என அவர் தெரிவித் துள்ளார்.

கண்டியில் ஊடகவியலாளர்களிற்கு பதில் அளிக்கையில் இதனை தெரிவித் துள்ள அவர், உலகின் முக்கியமான நாடு களின் கவனம் இலங்கையின் பக்கம் திரும் பியுள்ளதால் இன்னொரு நாடு திருகோண மலை துறைமுகத்தை கோரும் நிலையேற்படலாம் என குறிப் பிட்டுள்ளார்.

வேறு எந்த அரசாங்கமும் வெளிநாடு கள் இலங்கையில் நிரந்தரமாக கால்பதிப் பதற்கு அனுமதிக்கவில்லை என குறிப்பிட் டுள்ள அவர் அதேவேளை அந்த அரசாங் கங்கள் உலக நாடுகளுடன் சிறந்த உறவு களை பேணின எனவும் அவர் தெரிவித் துள்ளார்.

இலங்கையில் 100-150வருடங்கள் நிரந் தரமாக கால்பதிப்பதற்கான நிலையை வெளிநாடுகள் உருவாக்கியுள்ளன என லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

எனினும் அடுத்த 25 வருடங்களிற்கு அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் கொழும்பு துறைமுகநகரம் மூலம் இலங் கைக்கு எந்த வருமானமும் கிடைக்கப் போவ தில்லை என அவர் தெரிவித்துள் ளார்.

# துறைமுகநகர ஆணைக்குழு சட்டம் தோற்கடிக்கப்படும்

## சஜித் திட்டவட்டம்

கொழும்பு, ஏப். 19

கொழும்பு துறைமுகநகர பொருளா தார ஆணைக்குழு உத்தேச சட்டமூலம் உச்சநீதிமன்றத்தில் தோற்கடிக்கப்படும் என எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டையில் இதனை தெரிவித்துள்ள அவர், கொழும்பு துறை முகநகர திட்டத்தின் மூலம் அரசாங்கம் நிதி பயங்கரவாத நடவடிக்கைகளிலும் பிரிவினைவாதத்திலும் ஈடுபடுகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் கொழும்பு துறைமுக நகர திட்டம் இந்த நாட்டின் பிரஜைகளை மூன்றாம் தர பிரஜைகளாக மாற்றும் என அவர் தெரிவித்துள்ளார்.

நாடு வெளிநாடொன்றிற்கு அடிமை யாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அரசாங்கத்தின் முயற்சியை தோற்கடிப் பதற்காக ஐக்கியமக்கள் சக்தி நீதிமன்றத் தின் முன்னிலையில் அனைத்து விடயங் களையும் சமர்ப்பிப்போம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## முள்ளிவாய்க்கால்...

முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி பல் கலைக்கழக நிர்வாகத்தினால் கடந்த ஜன வரி 8ஆம் திகதி இடித்து அழிக்கப்பட் டது.

எனினும் அதனைக் கண்டித்து எழுந்த மக்கள் எழுச்சியாலும் மாணவர்களின் போராட்டங்களினாலும் இருந்த இடத் திலேயே முள்ளிவாய்க்கால் நினைவுத்தூ பியை மீள அமைக்க பல்கலைக்கழக நிர்வாகம் இணக்கம் தெரிவித்தது.

பல்கலைக்கழக துணைவேந்தரினால் அடிக்கல்லும் நட்டுவைக்கப்பட்டது.

முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம் எனக் குறிப்பிடப்பட்ட பதாகை காட்சிப் படுத்தப்பட்டு நினைவுத் தூபியை மீள அமைக்கும் பணி மாணவர்களின் பங் களிப்புடன் ஜனவரி 15ஆம் திகதி ஆரம்பமானது.

## உயிர்த்த ஞாயிறு...

உயிர்த ஞாயிறு தாக்குதல் இடம் பெற்று இரண்டு வருடங்கள் நிறைவடை வதை முன்னிட்டு கொழும்பு பொரளை கனத்தையிலும், மாதம்பிட்டியிலும் அமைக்கப்பட்ட நினைவுச் சின்னங்களை நேற்றைய தினம் திறந்துவைத்த பின்னர் கருத்து வெளியிட்டபோதே கர்தினால் இவ்வாறு தெரிவித்தார்.

"மதத் தீவிரவாதத்தினால் எமது சகோதரர்கள் தாக்கப்படவில்லை. அரசியல் அதிகாரத்தைப் பலப்படுத் திக்கொள்வதற்காக மதத் தீவிரவாதம் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது" எனவும் அவர் அங்கு குற்றஞ்சாட்டினார்.

"இந்தத் தாக்குதலில் எம்மால் அவ தானிக்கக்கூடியதாக இருப்பது என்ன வென்றால், இதற்கு மதத் தீவிரவாதம் காரணமாக இருக்கவில்லை. சில குழுவி னர் அரசியல் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக மேற்கொண்ட முயற்சி யின் பலன்தான் இது" எனவும் கர்தினால் தெரிவித்திருக்கின்றார்.

## முல்லைத்தீவு...

முல்லைத்தீவு விமானப் படையின் தகவலுக்கு அமைய முன்னெடுக்கப் பட்ட தேடுதலிலேயே அவை மீட்கப் பட்டுள்ளன என்று பொலிஸார் குறிப் பிட்டனர்.

இரணைமடு வரைபடம், 910646 என்ற இலக்கமுடைய தகடு, தமிழன் குண்டு ஒன்று, தமிழீழ விடுதலைப் புலி களின் தயாரிப்பான 4 குண்டுகள், ஆர். பி.ஜி மோட்டார் குண்டுகள் 5, 60 தர மோட்டார் குண்டுகள் 8, 81 தர மோட் டார் குண்டுகள் 3 மற்றும் நேரடி கையெறி ஒன்று என்பனவே மீட்கப்பட்டன.

அவற்றை செயலிழப்புச் செய்வதற் காக சிறப்பு அதிரடிப் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் கூறினர்.

## கொரோனாவால்...

ரின் எண்ணிக்கை 618 ஆக அதிகரித்தது.

பிட்டபெத்தர பிரதேசத்தை சேர்ந்த 52 வயது ஆணொருவரே இவ்வாறு உயி ரிழந்தார். (எ)

## மேலும் 287...

பதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித் தார்.

இதற்கமைய நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 96 ஆயிரத்து 719 ஆக அதிகரித்தது.

மேலும், கொரோனா தொற்றுக்குள் ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 618 ஆக அதிகரித்தது என சுகாதார அமைச்சு தெரிவித்தது. (எ)

## வடக்கு உட்பட...

பரவல் வேகமடையலாம் என அந்த எச்சரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், குருநாகலை மாவட் டத்தில் தித்தவேல்கல கிராமத்தில் 29 தொற்று நோயாளர்கள் கண்டறியப்பட் டதை அடுத்து அந்தக் கிராமம் நேற்று முதல் முற்றாக முடக்கப்பட்டதாக அந் தப்பிரதேச பொது சுகாதார பரிசோதகர் அறிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது...!

மாகாண சபைகளுக்கான தேர்தல் நடைபெறுமா இல்லையா என்பது குறித்து ஆராயப்படவேண்டிய நேரத்தில், நாமோ முதலமைச்சர் வேட்பாளர்கள் எவரெவர் என்பதில் காலத்தைக் கடத்திக்கொண்டிருக்கின்றோம்.

மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்துவதைக் காலம்கடத்த அரச தரப்பில் முயற்சி எடுக்கப்படுவதாக குற்றம்சாட்டப்பட்டாலும், அடுத்த ஜெனிவா கூட்டத்தொடர் ஆரம்பமாகவுள்ள செப்ரெம்பர் மாதத்தில், நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் சொல்லப்பட்ட ஏதாவது ஒரு விடயத்திலாவது தாம் கவனம் செலுத்துவதாக அரச தரப்பில் சொல்லப்படக்கூடிய ஒரேயொரு விடயம் இந்த மாகாணசபை விவகாரம்தான் என்பதால், தேர்தல்கள் நடைபெற்றாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நடைபெற்றால் என்ன செய்ய வேண்டும், எப்படி எதிர்கொள்ளவேண்டும் என்பது குறித்து ஆராயவேண்டியது அவசியமானதுதான். தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி. வி. விக்கினேஸ்வரன் தனது பங்கிற்கு வேலன் சுவாமியை நோக்கி கையைக் காட்டிவிட்டு ஒதுங்கிவிட்டார்.

பொது வேட்பாளர் குறித்ததே அவர் கருத்துத் தெரிவித்துள்ளார். பொது வேட்பாளர் என்றால் எந்தத் தரப்பின் பொதுவேட்பாளர் என்பது குறித்து அவர் எதுவும் சொல்லவில்லை.

தமிழ் தேசியக் கட்சிகளின் ஒன்றிணைந்த பொது வேட்பாளர் என்றால், தமிழ் கூட்டமைப்பையும் உள்ளடக்கி அதன் தலைமையிலான அணியை வெல்ல வைப்பதற்கான ஒரு முயற்சியாக அது இருக்கும்

அப்படி இல்லாமல், கூட்டமைப்பின் வேட்பாளருக்கு எதிராக ஒரு தமிழ் தேசிய பொது வேட்பாளர் என்றால், அது தமிழ் தேசியத் தரப்பினருக்கு எதிரான அணியினரை வெல்ல வைப்பதற்கான ஒரு முயற்சியாகத்தான் இருக்கமுடியும்.

தமிழ்த் தேசியத் தரப்புக்கள் எல்லோரும் இணைந்து ஒரே அணியாக களம் இறங்குவதெனில் அந்த முயற்சியை முன்னெடுக்கவேண்டியவர்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பாகத்தான் இருக்கவேண்டும்.

ஆனால், அவர்கள் தரப்பிலிருந்து அதுபோன்ற அறிவிப்போ அல்லது கருத்தோ இதுவரை முன்வைக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

ஆனால், அண்மையில் மாகாண சபைகள் குறித்து கருத்துத் தெரிவித்திருந்த நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், மாகாண சபை முறைமை இல்லாமல் போக அனுமதிக்கப் போவதில்லை என்றும், ஆனாலும் தமது கட்சி வடக்கு கிழக்கு இணைந்த ஒரு தீர்வை நோக்கி தொடந்து பயணிக்கும் என்றும் தெரிவித்திருந்தார்.

வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழர்களின் தாயகம் என்பதை முதல் முதலாக ஒரு சர்வதேச ஒப்பந்தத்தின் மூலம் இலங்கை அரசு ஏற்றுக்கொண்டமை, இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் மூலமே. அதனாலேயே வடக்கு கிழக்கு இணைந்து மாகாணசபை உருவாக்கப்பட்டது.

அதனை நீதிமன்றத்தின் மூலம் கேள்விக்கு உட்படுத்தி, ஜே.வி.பி என்ற மக்கள் விடுதலை முன்னணி நீதிமன்ற உத்தரவின்மூலம் இல்லாமல் செய்தது வேறு சங்கதி என்றாலும், இலங்கை இந்திய ஒப்பந்தம் வடக்கு - கிழக்கை தமிழர்களின் பூர்வீக இடங்களாக ஏற்றுக்கொண்டிருந்ததை ஞாபகப்படுத்தவேண்டும்.

இன்று வடக்கு கிழக்கு இணையவேண்டும் என்று தமிழ் தேசிய கட்சிகள் தொடர்ந்து குரல்கொடுத்துவந்தாலும், கிழக்கு தமிழ் மக்கள் மத்தியில் அதற்கான ஆதரவு எவ்வாறாக இருக்கிறது என்பது ஆராயப்படவேண்டயுள்ளது.

இந்த இணைப்பை மூர்க்கத்தனமாக எதிர்க்கும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சிக்கும் அங்கு கணிசமான மக்கள் ஆதரவு உண்டு என்பதும் கவனத்தில் கொள்ளப்படவேண்டிய விடயம். இந்த நிலை தொடந்து நீடிப்பதை அனுமதிப்பதும் ஒட்டுமொத்த தமிழினத்தின் இருப்பிற்கும் நல்லதல்ல.

இந்த நிலையில் - நடக்கவிருக்கும் மாகாண சபைத் தேர்தல்களை இரண்டு மாகாணங்களிலும் உள்ள தமிழ் மக்கள் மத்தியில் நல்லுறவை கட்டிவளர்க்க- நல்லெண்ணத்தை ஏற்படுத்த ஒரு அரிய வாய்ப்பாகத் தமிழ் தேசிய கட்சிகள், குறிப்பாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு, குறிப்பாக தமிழ் அரசு கட்சி முயற்சி எடுக்கவேண்டும். அம்பாறைக்கு ஓர் இடம் பொடுக்கப்படவேண்டும் என்பதற்காகவே கலையரசனுக்கு தேசியப் பட்டியல் எம்.பி. நியமனம் வழங்கப்பட்டதாக கூட்டமைப்பு தரப்பில் தெரிவிக்கப்பட்டமை குறித்து முன்னர் ஒரு தடவை ஊர்க்குருவி குறிப்பிட்ட போது -

மாவை சேனாதிராசாவையே தேசியப் பட்டியல் ஊடாக நியமித்திருந்தாலும், அவர் கூட அம்பாறை எம்.பி.போல செயற்பட்டிருக்கலாம் என்று தெரிவித்திருந்தது. அம்பாறையின் தேவைகளை அம்பாறையைச் சேர்ந்த ஒருவர்தான் நிறைவேற்றவேண்டும் என்பதல்ல, அம்பாறையைச் சேர்ந்தவர்தான் அம்பாறை எம்.பி.யாக இருக்கவேண்டும் என்றால் அதுகூட ஒரு பிரதேசவாத சிந்தனையிலிருந்துதான் எழுகின்றது என்றும் கொள்ளலாம். வடக்கு கிழக்கிற்கு பொதுவான ஒரு தமிழ் மகனால் மாத்திரமே பிரிக்கப்படாத தமிழர் தாயக தீர்வுக்கு தலைமை தாங்கமுடியும்.

வரவிருக்கும் மாகாண சபை தேர்தலைகளை, ஒரு முன்மாதிரியாக ஏன் தமிழ் தேசிய தலைமைகள் எதிர்கொள்ளக் கூடாது? வடக்கு மாகாண சபைக்கு முதலமைச்சர் வேட்பாளராக களம் இறங்க விரும்பும் மாவை சேனாதிராசாவை கிழக்கு மாகாண சபையின் முதல்வர் வேட்பாளராகவும், கிழக்கு மாகாணத்திலிருந்து ஒரு பொருத்தமானவரை வடக்கு மாகாண சபை முதல்வர் வேட்பாளராகவும் ஏன் களமிறக்கக்கூடாது? மாவை சேனாதிராசா கிழக்கு மாகாண முதல்வராகினால், அவரை நன்கு அறிந்த முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் கூட அவரை ஆதரிக்க முன்வரலாம்.

கிழக்கு மாகாண முதல்வராக சாணக்கியன் களம் இறங்க வேண்டும் என்று அண்மையில் நமது சிறிதரன் கருத்துத் தெரிவித்திருந்தார். ஆனால், சாணக்கியனோ, இப்போதுதான் தமிழ் தேசிய அரசியலுக்குள் வந்திருக்கின்றார். ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக அவர் செய்யவேண்டியவை அதிகம் உள்ளன. அதனால் அவரை விட்டுவிடுவது நல்லது.

அதே சமயம் - அவரைப் போலவே, தமிழ் அரசு கட்சி பாரம்பரியத்தில் வந்தவர், கட்சியின் ஒரு மூத்த தலைவரான முன்னாள் எம்.பி. சாம் தம்பிமுத்து அவர்களின் புதல்வர் அருண் தம்பிமுத்து. அவரது தாயார் கலா மாணிக்கம் வடக்கே மாவிட்டபுரம் - தெல்லிப்பளையைச் சேர்ந்தவர். மங்கையற்கரசி அமிர்தலிங்கம் போல, கிழக்கில் தமிழ் அரசு கட்சியை வளர்க்க தனது பதின்ம வயதிலிருந்தே போராடியவர் கலா அவர்கள். இளம் சாணக்கியனை அரசியலுக்குள் கொண்டுவந்தவரும் அருண்தான்.

இவ்வாறான ஒரு பின்னணி உடையவரும், அறிவும் ஆற்றலும் மிக்கவருமான அருண் தம்பிமுத்துவை கிழக்கிலிருந்து ஏன் வடக்கின் முதல்வராக களம் இறக்க நாம் சிந்திக்கக்கூடாது? பிரிக்கப்படாத தமிழர் தாயக தீர்வை நோக்கி நல்லுறவை வலுப்படுத்த இவ்வாறான சிந்திப்புக்களையே தமிழ் தேசிய கட்சிகள் செய்ய வேண்டும்.

- ஊர்க்குருவி.

# முன்வினை பயனை இப்போது அனுபவிக்கிறார் விஜயதாஸ

## காவிந்த எம்.பி. கடும் சாடல்



கொழும்பு,ஏப்.19

**ஆளும் தரப்பு பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜக்ஷவை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அச்சுறுத்தியதாக குறிப்பிடப்படும் விடயத்துக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய தேவை கிடையாது. ஏனெனில் அவர் முன்வினை பயனையே இப்போது அனுபவிக்கிறார். விஜயதாஸ ராஜபக்ஷ நல்லாட்சி அரசாங்கத்தில் நீதியமைச்சர் பதவி வகித்துக்கொண்டு ராஜபக்ஷக்களுக்கு ஆதரவாகச் செயல்பட்டதை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள் என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜெயவர்த்தன கடுமையாகச் சாடியுள்ளார்.**

கொழும்பு துறைமுக நகர பொருளாதார வலய ஆணைக் குழு சட்டமூலம் தொடர்பில் வினவிய போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்ட மூலத்தை அரசாங்கம் கடந்த 8 ஆம் திகதி பாராளுமன்றில் சமர்ப்பித்தது.

இச்சட்ட மூலத்துக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கைகளை முன்னெடுக்காத முடியாத வகையில் பொது விடுமுறை காலத்தில் சட்டமூலம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

ஆனால், அரசாங்கத்தின் குறுகிய நோக்கம் வெற்றி பெறவில்லை. இச்சட்ட மூலத்துக்கு எதிராக பல மனுக்கள் உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டு இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட இச்சட்ட மூலம் குறித்து பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ குறிப்பிட்ட கருத்தால் ஜனாதிபதி தன்னை அச்சுறுத்தியதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயத்தை பெரிதுபடுத்துவது அவசிமற்றது. முன்வினையின் பயனை விஜயதாஸ ராஜபக்ஷ தற்போது அனுபவிக்கிறார்.

திருடர்களுக்குத் தண்டனை வழங்குவதாக குறிப்பிட்டு நல்லாட்சி அரசாங்கம் ஆட்சியமைத்தது. இந்த வாக்குறுதியை நிறைவேற்ற முடியவில்லை.

அதற்கு இவ்வாறானவர்களும் ஒரு காரணியாகும். நீதியமைச்சர் பதவி வகித்து கொண்டு ஒரு தரப்பினருக்கு சார்பாக செயல்பட்டமை குறித்து இவரே பலமுறை பகிரங்கமாக ஊடகங்கள் மத்தியில் குறிப்பிட்டுள்ளார். இவரது அரசியல் செயல் பாட்டை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்.

தமிழர்கள் நாட்டைப் பிளவுபடுத்த முயற்சிக்கிறார்கள். அதற்கு இடமளிக்கக் கூடாது என்று போலியான குற்றச்சாட்டை முன்வைத்து அரசாங்கம் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியது.

69 இலட்ச மக்களும் பொய் வாக்குறுதிகளால் ஏமாற்றப்பட்டுள்ளனர். இனியாவது பெரும்பான்மை மக்கள் உண்மைத் தன்மையைப் புரிந்துகொள்ள வேண்டும்.

கொழும்பு துறைமுக நகர பொருளாதார வலய ஆணைக் குழு சட்டமூலம் தொடர்பில் நீதிமன்றம் எவ்வாறான தீர்வு (தீர்ப்பு) வழங்கும் என்பதை இப்போது குறிப்பிட முடியாது.

நாட்டு மக்கள் அனைவரும் நீதித்துறையையே இறுதியாக நம்பியுள்ளனர். அரசாங்கத்தின் முறையற்ற செயல்பாட்டுக்கு எதிராக நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும்- என்றார்.

13 வயதுடைய

## இரண்டு சிறுவர்கள் நீரில் மூழ்கிப் பலி!

தம்பலகாமம்,ஏப்.19

திருகோணமலை - தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பரவிப்பாஞ்சான் குளத்தில் குளிக்கச் சென்ற இரண்டு சிறுவர்கள் நீரில் மூழ்கிப் பலியாகினர்.

இந்த துயரச் சம்பவம் நேற்று முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்றது.

இவ்வாறு உயிரிழந்த சிறுவர்கள் முள்ளிப்பொத்தானை - ஈச்சநகர் பகுதியைச் சேர்ந்த சுஹைல் சக்தி (13 வயது) மற்றும் முள்ளிப்பொத்தானை- 95 ஐ சேர்ந்த அலிப்தீன் அஸ்கார் (13 வயது) எனவும் தெரிய வருகின்றது. (எ)

## கொரோனாத் தொற்றிலிருந்து மேலும் 281 பேர் குணமடைவு

கொழும்பு,ஏப்.19

இலங்கையில் கொரோனா தொற்றிலிருந்து மேலும் 281 பேர் குணமடைந்து நேற்று ஞாயிற்றுக்கிழமை வீடுகளுக்குத் திரும்பினர்.

இதனையடுத்து, நாட்டில் கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 93 ஆயிரத்து 113 ஆக அதிகரித்தது.

நாட்டில் இதுவரையில் 96 ஆயிரத்து 439 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

இவர்களில் 2 ஆயிரத்து 709 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, கொரோனா தொற்றால் நாட்டில் இதுவரையில் 617 மரணங்கள் பதிவாகியுள்ளன. (எ)




**காலை**

5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**

12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
19.04.2021 திங்கட்கிழமை
சார்வரி, சித்திரை 06

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

e-mail: editor@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# சுமந்திரனை வெளியேற்றுதல்

மதியாபரனம் ஆபிரகாம் சுமந்திரன் தொடர்பில், ஒரு நெருப்பு ஏதோவொரு வகையில் தமிழரசு கட்சிக்குள்ளும், தமிழ் தேசிய கூட்டமைப்பிற்குள்ளும் எரிந்துகொண்டே இருக்கின்றது. அந்த நெருப்பு புகைந்துகொண்டிருக்கின்றது - அவ்வப்போது யாரோ ஒருவர் அதனை ஊதி நெருப்பாக்கின்றார். ஆனால், நெருப்பாக்கக்கூடிய அளவிற்கு கட்சிக்குள் சுமந்திரன் விவகாரம் புகைந்துகொண்டே இருக்கின்றது. இலங்கை தமிழரசு கட்சியின் மத்திய குழு உறுப்பினரும், கொழும்பு கிளையின் முக்கியஸ்தருமான சட்டத்தரணி தவராசா, மீண்டும் சுமந்திரன் விவகாரத்தை ஊடகங்களில் பேசுபொருளாக்கியிருக்கின்றார். அதாவது, சுமந்திரனை கட்சியிலிருந்து நீக்குமாறு கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுக்கு கடிதமொன்றை அனுப்பியிருக்கின்றார். இக்கட்டான கட்டத்தில் சம்பந்தன் அவரது வரலாற்று கடமையை சரியாகச் செய்யாவிட்டால், கூட்டமைப்பின் வரலாற்றின் இறுதி அத்தியாம் எழுதப்படுமென்றும் குறித்த கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டிருக்கின்றது.

முதலாவது, தற்போதைய சூழலில் சம்பந்தன் நினைத்தால்கூட, சுமந்திரனை கட்சியிலிருந்து நீக்க முடியுமா என்பது முதலாவது கேள்வி. சம்பந்தன் அதற்கு முயற்சிப்பாரா என்பது, இரண்டாவது கேள்வி. சம்பந்தனை பொறுத்தவரையில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பை பலப்படுத்துவதற்கான அனைத்து சந்தர்ப்பங்களையும் வீணாக்கிய ஒருவர். சம்பந்தன் முழு ஆற்றலுடன் இருக்கின்ற காலத்தில், பல்வேறு விடயங்களை செய்திருக்கமுடியும் - இதுதொடர்பில் பலரும் சம்பந்தனிடம் வலியுறுத்தியிருந்தனர் ஆனால், சம்பந்தனோ அவை எதற்கும் செவிசாய்க்கவில்லை. அதன் விளைவுகளையே இன்று கூட்டமைப்பு எதிர்கொள்கின்றது. கூட்டமைப்பிற்கென்று பொறுப்புச் சொல்லக்கூடிய அரசியல் உயர் கட்டமைப்பொன்று இருந்திருக்குமானால், இன்றைய நிலைமை ஏற்பட்டிருக்காது. சுமந்திரன் தன்னிச்சையாக செயற்படுவதற்கான சூழலும் கட்சிக்குள் இந்தளவிற்கு இருந்திருக்காது. இன்று, சுமந்திரன் இந்தளவிற்கு தன்னிச்சையாக செயற்படுகின்றார் என்றால், அதற்கான வாய்ப்புக்களை தாரளமாக ஏற்படுத்திக் கொடுத்தவரே சம்பந்தன்தான். சம்பந்தன் ஆங்கிலத்தில் பேசுவதையே அந்தஸ்தாக கருதும் ஒருவர். ஆங்கிலம் தெரிந்தவர்களையும், சட்டப் பின்புலம்கொண்டவர்களையும் ஆளுமைமிக்கவர்களாக கருதும் ஒருவர். அவரது இந்தப் புரிதலும் வாழ்க்கை முறையும் தான், சுமந்திரனை கட்சியின் நட்சத்திர வீரராக்கியது. தனக்கு கிடைத்த நட்சத்திர அந்தஸ்த்தையே சுமந்திரன் பின்னர் தனது வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொண்டார். ஆரம்பத்தில், தமிழரசு கட்சியின் மூத்த உறுப்பினர்கள் என்போர் அனைவருமே இதனை கண்டும் காணாமலேயே இருந்தனர். தங்களுக்கான கதிரை மட்டும் போதுமென்றே சிந்தித்தனர். மாவை. சேனாதிராசா, தேர்தலில் தோல்வியடைந்ததைத் தொடர்ந்தே அனைவரும் விழிப்புணர்வு பெற்றனர். சுமந்திரன் தன்னிச்சையாக செயற்படுவதாக குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர்.

சுமந்திரன் இப்போது ஒரு பாராளுமன்ற உறுப்பினர், கூட்டமைப்பின் பேச்சாளராக அவர் நியமிக்கப்படவில்லை என்றபோதிலும்கூட, அவர்தான் அந்தப் பொறுப்பையும் வகித்து வருகின்றார். சம்பந்தனால், பேச்சாளர் விடத்தையே இதுவரையில் தீர்த்துவைக்க முடியவில்லை. இந்த நிலையில், கட்சியிலிருந்து எவ்வாறு சுமந்திரனை வெளியேற்ற முடியும்? ஆனால், மாவை. சேனாதிராசாவின் தலைமையிலான தமிழரசு கட்சியினர் பெரும்பான்மையாக திரண்டு, கட்சிக்குள் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த முடிந்தால் மட்டுமே, ஓரளவு இந்த விடயத்தை சாத்தியப்படுத்த முடியும். சுமந்திரனுக்கு கடிவாளமிட முடியும். ஆனால், அவ்வாறான தற்றுணிவோடும், ஆளுமையுடனும் தமிழரசு கட்சியின் தலைமைக் குழு இருக்கின்றதா? பொதுவாக, கட்சியின் விதிகளை மீறுவோரை கட்சியிலிருந்து வெளியேற்றும் நடைமுறை அனைத்து ஜனநாயக கட்டமைப்புக்களிலும் உண்டு.

# செயலில் இறங்கும் ஐ. நா. மனித உரிமைகள் பேரவை!

- அலசுவது **இராஜதந்திரி** -

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையினால் இலங்கைமீது கொண்டுவரப்பட்ட தீர்மானம் இத்தடவை இலங்கை அரசினால் நிராகரிக்கப்பட்ட நிலையில் / அடுத்தகட்ட நடவடிக்கைபற்றி செயலில் இறங்குவது குறித்து ஐ. நா மனித உரிமைகள் பேரவை பரிசீலிக்க ஆரம்பித்துள்ளது. ஐ.நா மனித உரிமைப் பேரவையின் பிரதிநிதிகளுடனான சந்திப்புகள் உட்பட, இலங்கையில் இறுதிக்கட்ட யுத்தத்தின்போது இடம்பெற்றதாக தெரிவிக்கப்படும் யுத்தக்குற்றங்கள், மற்றும் மனித உரிமை மீறல்கள் என்பவை குறித்து ஆதாரங்களை திரட்டும் நடவடிக்கைகளில் இறங்கப்போவதாகவும் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயல்திட்டத்தின் நிறைவேற்று பணிப்பாளர் யஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.

ஆதாரங்களைத் திரட்டுவதுபற்றி குறிப்பிடப்பட்டுள்ளபோதிலும், மிக அவதானத்துடன் பக்குவமாக யுத்த குற்றச்சாட்டுகள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்த ஆதாரங்கள் சேகரிக்கப்பட்டு, அவை ஒரு பரந்துபட்ட விசாரணைக்கு ஏற்ற விதத்தில் தொகுத்து தயார்படுத்தப்படவேண்டுமெனவும் யஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.

**ஆதாரங்கள் சேகரிப்பு**

ஏற்கனவே கண்கண்ட ஆதாரங்கள் உட்பட, குற்றங்கள் புரியப்பட்டபோது நேரடியாகவே சேகரிக்கப்பட்ட ஆதாரங்களும் காணொளிகள், புகைப்படங்கள் வாயிலாக கிடைக்கப்பெற்றுள்ளன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை இலங்கைமீதான பிரேரணைகளை கடந்த சில வருடங்களாக கொண்டுவருவதற்கு அடிப்படையாக விளங்கியதுகூட இறுதிக்கட்ட யுத்தத்தின்போது சேகரிக்கப்பட்ட ஆதாரங்கள் மற்றும் கண்கண்ட சாட்சியங்கள் என்பவையே என்பது குறிப்பிடத்தக்கது. எனவே, இவற்றின் அடிப்படையிலேயே இலங்கைமீது எந்தவொரு சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என யஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.

**பீல்ட் மார்ஷலின் கருத்து**

இத்தருணத்திலேயே பாராளுமன்றத்தில் சிலமாதங்களுக்கு முன்னர் உரையாற்றிய முன்னாள் இராணுவ தளபதியும், இறுதிக் கட்ட யுத்தத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக வெற்றிகரமாக படை நகர்வுகளை மேற்கொண்டவருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கூறியதை நினைவில் கொள்ளவேண்டியுள்ளது.

சரத் பொன்சேகா தமது உரையில் யுத்தக் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் என தெரிவிக்கப்பட்டால் விசாரணைகளுக்கு முகங்கொடுத்து, உண்மை நிலபரத்தை நிரூபிப்பதே தகுந்த அணுகுமுறையாக இருக்கமுடியுமே தவிர, எவ்விதத்திலும் விசாரணைகளை தட்டிக்கழிப்பதன் மூலமோ அல்லது விசாரணைகளிலிருந்து பின்வாங்குவதன்மூலமோ குற்றச்சாட்டுகளை நிராகரித்து விடமுடியாது என தெரிவித்திருந்தார். அதேசமயம், சில இராணுவ வீரர்கள் தனிப்பட்ட முறையில் குற்றச் செயல்களைப் புரிந்திருக்க வாய்ப்புகளிருந்தாகவும் சரத் பொன்சேகா தெரிவித்ததோடு, யுத்த குற்றங்கள் புரியப்படவில்லை என்பதை அவர் முற்றுமுழுதாக நிராகரித்து விடவுமில்லை.

எனவே, யஸ்மின் சூக்கா இலங்கையில் யுத்தக்குற்றங்கள் என்று கண்டறியப்பட்டவை தொடர்பான ஆதாரங்களை சேகரிப்பது தொடர்பாக கருத்துகளை வெளியிட ஆரம்பித்துள்ளமை, இலங்கைமீது ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை தனது பிடியை படிப்படியாக இறுக்கிக்கொண்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்றே கருதமுடியும்.

**இலங்கை விட்ட தவறுகள்**


ஐக்கிய நாடுகள் மனித உரிமைப்பேரவை பிரேரணையை இலங்கை சவாலாக கருதியமை முதலாவது தவறாகும். இதன்பின்னர் அதன் உள்ளடக்கங்களை சாதகமாக பரிசீலித்து, சரத் பொன்சேகா குறிப்பிட்டது போல இலங்கைமீது சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுகளை எதிர்கொண்டு, உண்மைத் தன்மைகளை நிரூபிக்க முன்வராது நிராகரித்தமை இரண்டாவது தவறாகும்.

இந்நிலையில், இலங்கை ஜெனிவா பிரேரணையை நிராகரித்தாலும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைப்பேரவை அப் பிரேணைக்குப் பொறுப்புக்கூறவேண்டிய நிலையில் காணப்படுகின்றது. இதன்காரணமாகவே இலங்கை அரசு ஜெனிவா பிரேரணையை நிராகரித்துள்ளபோதிலும் அதனை எவ்வாறு இலங்கையின் சிவில் சமூகத்தின் அனுசரணையோடு சாதகமான முறையில் அமுலாக்கலாம் என்பதுபற்றி ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை ஆராய்ந்து வருவதனை அறிய முடிகின்றது.

எது எப்படியிருந்தபோதிலும், இத்தடவை ஜெனிவா பிரேரணை குறித்து நிறையவே எதிர்பார்ப்புகளுடன் இலங்கையில் வடக்கு-கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்கள் காணப்பட்டிருந்தனர்.

இருந்தபோதிலும், இலங்கை அரசு ஜெனிவா பிரேணையை நிராகரித்துள்ள நிலையில் சர்வதேச சமூகம்மீது பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மக்கள்கொண்டுள்ள நம்பிக்கையும் வீண் போகாதவாறு பாதுகாக்கவேண்டியதை ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை உறுதி செய்யவேண்டியது இன்றியமையாததாகின்றது.-

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
பெண்களுக்கு ஏற்பட்டிருந்த மனக்குழப்பம் தீர ஆரம்பிக்கும். நண்பர்களால் நல்ல விஷயம் ஒன்று நடைபெற்று மகிழ்விக்கும். சுப முயற்சிகள் தள்ளிப்போவது பற்றிய கவலை வேண்டாம்.

**இடபம்**
உங்களுக்குக் கிடைக்க வேண்டிய அங்கீகாரம் கிடைக்கும். அறிமுகம் இல்லாதவர்களிடம் எதையும் பேசிப் பகிர வேண்டாம். மின்னணு சாதனம் ஒன்றை வாங்கி சந்தோஷப்படுவீர்கள்.

**மிதுனம்**
பழைய தவறுகளுக்கு வருந்தி உங்களை மாற்றிக் கொள்வீர்கள். பழைய வாகனம் ஒன்றை மாற்றிப் புதிதாக வாங்க வாய்ப்புள்ளது. புதிய ஆடை, நகைகள் வாங்கும் முயற்சிகள் நிறைவேறும்.

**கடகம்**
வரவு, செலவு ஏற்ற இறக்கத்துடன் இருந்தாலும் நிம்மதி உண்டு. அனுபவம் மிக்கவரின் ஆலோசனை கிடைப்பதால் வாழ்வு மேம்படும். உற்சாகத்தை அதிகரிக்கும் சம்பவங்கள் நடைபெறும். இனிய நாள்.

**சிம்மம்**
நண்பர்களின் உதவி இருக்கும். ரசிக்கும் விருந்து கிடைக்கும். நினைத்தது நிறை வேறும். பணியிடத்தில் இருந்த போட்டி அதிகரிக்கும். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். நிம்மதி மீளும்.

**கன்னி**
கவலைகள் தீரும். புதிய முயற்சிகளை ஆரம்பிப்பீர்கள். பாராட்டு காரணமாகப் பணியாளர்கள் உற்சாகத்துடன் செயல்படுவர். உறவினரைத் தொடர்பு கொள்வதால் நல்லது நடைபெறும்.

**துலாம்**
பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிய திட்டம் வடிவெடுக்கும். வேலைகள் விரைந்து முடியும். நீண்ட நாள் ஆசை ஒன்று நிறைவேறும். பிள்ளைகள் உங்கள் நலனில் ஆர்வம் காட்டுவார்கள்.

**விருட்சிகம்**
உங்களுக்கான புதிய பொருள் வாங்குவது பற்றிய எண்ணம் நிறைவேறும். கடன் பிரச்னை பற்றி சூடான வாக்குவாதம் செய்ய வேண்டாம், நிதானத் துடன் செயல்பட வேண்டும். கற்பனை பயம் இருக்கும்.

**தனுசு**
குழந்தைகளின் வாழ்வு மேம்படும். குடும்ப விழா களைகட்டும். பணியாளர்களுக்கு விருப்பம் நிறைவேறும். மகிழ்ச்சி அதிகரிக்கும். பொது வாழ்வில் புகழ் கூடும். இனிய செய்தி ஒன்று வரும்.

**மகரம்**
பிள்ளைகளால் ஏற்பட்ட தொல்லையிலிருந்து விடுபடுவீர்கள். விழிப்புடன் செயல்பட வேண்டிய நாள். பேச்சில் கவனம் தேவை. எடுத்த விஷயம் ஒன்று சிறு தடைகளுக்குப் பிறகு நிறைவேறும்.

**கும்பம்**
பணியாளர்களுக்கு நற்செய்தி உண்டு. வாகனம் வாங்குவீர்கள். பதற்றமான நிலை மாறும். கோபத்தை கட்டுப்படுத்த வேண்டும். இளைஞர்கள் உயர்வதற்கான வழியைத் தேர்ந்தெடுப்பீர்கள்.

**மீனம்**
நண்பர்களுடன் சிறு கருத்து வேற்றுமை ஏற்பட்டுச் சரியாகும். சக பணியாளர் ஒருவர் சிறு தொல்லைகள் தருவார். பணியாளர்கள் உன்னிப்பாக உழைத்துப் பாராட்டுப் பெறுவீர்கள்.

# தடுப்பூசி கையிருப்பு 5 இலட்சம் மட்டுமே!

## ஏமாற்றத்துடன் திரும்பும் தமிழக மக்கள்



சென்னை, ஏப். 19
தமிழகத்தில் கொரோனா தடுப்பூசி, ஐந்து லட்சம் மட்டுமே கையிருப்பில் உள்ளது. பல மாவட்டங்களில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், ஓரிரு நாட்களில் தடுப்பூசிக்கு மக்கள் தவம் கிடக்கும் நிலை உருவாகலாம்.

நாடு முழுதும், கொரோனா தொற்றை கட்டுப் படுத்த, கொவிஷீல்ட் அல்லது கோவேக்சின் தடுப்பூசிகள், 45 வயதுக்கு மேற்பட்டோருக்கு போடப்பட்டு வருகின்றன. ஆரம்பத்தில் கொரோனா தடுப்பூசி போட மக்கள் தயக்கம் காட்டினர். இதனால், தடுப்பூசி மையங்கள் வெறிச்சோடி காணப்பட்டன. தற்போது, கொரோனா இரண்டாம் அலை மற்றும் அரசு ஏற்படுத்திய விழிப்புணர்வால், கொரோனா தடுப்பூசி போட்டுக் கொள்ள மக்கள் ஆர்வமுடன் வருகின்றனர். இதன் காரணமாக, தமிழகத்தில், கடந்த வெள்ளி வரை, 45 லட்சம் பேர் தடுப்பூசி போட்டுக் கொண்டுள்ளனர்.

**தட்டுப்பாடு**

எனவே, சென்னை மற்றும் அதன் புறநகர் மாவட்டங்களை தவிர்த்து, மாநிலம் முழுதும், தடுப்பூசிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. பல மையங்களில் தடுப்பூசி இல்லாததால், பொது மக்கள் திரும்பி செல்கின்றனர். குறிப்பாக, பிரதமர், ஜனாதிபதி உள்ளிட்ட தலைவர்கள் போட்டுக் கொண்ட, கோவேக்சின் தடுப்பூசிக்கு மக்களிடையே அதிக வரவேற்பு உள்ளது. இந்த தடுப்பூசிக்கு, நாடு முழுதும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

அதனால், கோவக்சின், இரண்டாவது டோஸ், தடுப்பூசி போட முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது. கொரோனா தடுப்பூசி தட்டுப்பாடு காரணமாக, தமிழகத்தில் பல மருத்துவ மனைகளில் மக்கள் கூட்டம் அலைமோதுகிறது. நீண்ட வரிசையில் பொதுமக்கள் காத்து இருந்தும், தடுப்பூசி இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது.

**கொள்முதல்**

இது குறித்து, சுகாதாரத்துறை அதிகாரிகள் கூறியதாவது:

கொரோனா தடுப்பூசியை பொறுத்த வரை, மாநில அரசுகள் நேரடியாக கொள்முதல் செய்ய முடியாது. மத்திய அரசு தான், அனைத்து மாநிலங்களுக்கும் பகிர்ந்து அளித்து வருகிறது. தற்போது, தமிழகத்தில் ஐந்து லட்சம் தடுப்பூசிகள் கையிருப்பில் உள்ளன. தினமும், இரண்டு லட்சம் பேருக்கு தடுப்பூசி போடப்படுவதால், இவை போதுமானதாக இல்லை.

எனவே, 15 லட்சம் கொவிஷீல்ட், ஐந்து லட்சம் கோவேக்சின் தடுப்பூசிகள் தேவை என, மத்திய அரசிடம் கேட்டுள்ளோம்.

நேற்று முன்தினம், ஒரு லட்சம் கோவேக்சின் தடுப்பூசியை மத்திய அரசு அனுப்பியது. இன்று, இரண்டு லட்சம் கொவிஷீல்ட் தடுப்பூசி வந்து சேரும்.

தடுப்பூசி போட்டு கொள்ள மக்கள் காட்டும் ஆர்வத்திற்கு, இந்த எண்ணிக்கை போதுமானதாக இல்லை. இதனால், மாநிலம் முழுதும், கொரோனா தடுப்பூசிக்கு தட்டுப்பாடு ஏற்படலாம்.

இவற்றை தவிர்க்க, மத்திய அரசு அவ்வப்போது, தடுப்பூசியை தமிழகத்திற்கு வழங்கும் என, எதிர்பார்க்கிறோம்-என்று கூறினர்.

# டுபாயிலிருந்து விமானத்தில் கடத்தி வரப்பட்ட ரூபா 2.90 கோடி மதிப்புள்ள தங்கம் பறிமுதல்!

சென்னை, ஏப். 19
டுபாயில் இருந்து, விமான இருக்கையில் மறைத்து கடத்தி வரப்பட்ட, 2.90 கோடி ரூபா மதிப்புள்ள தங்க கட்டிகளை, சுங்கத் துறையினர் பறிமுதல் செய்தனர்.

வளைகுடா நாடுகளில் இருந்து, தங்கம் கடத்தப்படுவதாக, சுங்கத் துறையினருக்கு ரகசிய தகவல் வந்தது. இதையடுத்து, அங்கிருந்து வரும் விமான பயணியர் மற்றும் விமானங்களை, சுங்கத் துறையினர் சோதனையிட்டனர். ஐக்கிய அரபு நாட்டின், துபாய் நகரில் இருந்து, 'எயார் இந்தியா' விமானம் வெள்ளிக்கிழமை பிற்பகல், 12:25 மணிக்கு, சென்னை வந்தது.



அந்த விமானத்தில் வந்த பயணியர் இறங்கியவுடன், விமானத்தை சுங்கத் துறையினர் சோதனையிட்டனர். அப்போது, ஒரு குறிப்பிட்ட இருக்கையின் அடியில், வெள்ளை நிற, 'ரேப்' சுற்றப்பட்ட, இரண்டு பொதிகள் இருப்பதை, சுங்கத் துறையினர் கண்டுபிடித்தனர். அதை பிரித்து பார்த்த போது, 6 கிலோ தங்க கட்டிகள் இருந்தன. இதன் மதிப்பு, 2.90 கோடி ரூபா. தங்க கட்டிகளை பறிமுதல் செய்த சுங்கத் துறையினர், தங்க கட்டிகளை கடத்தியவர்கள் குறித்து, விசாரித்து வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளும் கூட்டணி எதிர்காலம் என்ன?

## பிரதமருடனான இன்றைய சந்திப்பில் முடிவு

கொழும்பு, ஏப். 19

இலங்கையில் ஆளும் கூட்டணிக் கட்சிகளுக்கிடையில் குழப்பங்கள் ஏற்பட்டுள்ள நிலையில் இது குறித்து ஆராயும் விசேட சந்திப்பு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இன்று திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.

இதில் பொதுஜன பெரமுன தலைமையிலான ஆளும் கூட்டணி அரசில் அங்கம் வகிக்கும் 11 கட்சிகளின் தலைவர்களும் பங்கேற்கவுள்ளனர்.

ஆளும் கூட்டணியில் அங்கம் வகிக்கும் பெரும்பாலான கட்சிகள் இம்முறை மே தினத்தை தனியாக நடத்துவது குறித்து ஆலோசித்து வருகின்றன. எனினும் ஒன்றிணைந்தே மே தினம் நடைபெறும் என பொதுஜன பெரமுன தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. இந்த விடயம் குறித்து நாளைய சந்திப்பில் ஆராய்ந்து தீர்மானம் எடுக்கப்படவுள்ளது.அத்துடன், மாகாண சபை தேர்தல் முறைமை குறித்தும் இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்படவுள்ளது.

இந்நிலையில் ஆளும் கூட்டணிக் கட்சிகளுடன் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளுக்கு தீர்வு காணப்படுமா? அல்லது குழப்பங்கள் நீடிக்குமா? என்பது குறித்து இன்று சந்திப்பின் பின்னரே தெரியவரவுள்ளது.

# கூட்டமைப்பின் வடக்கு எம்.பிக்கள் அரசின் அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு

## ஆளுநர் பாராட்டு

யாழ்ப்பாணம், ஏப். 19

அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி திட்டங்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒத்துழைப்பு கிடைப்பதாக வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பது தொடர்பில் நாம் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களோடும் திணைக்களங்களுடனும் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம். அந்தவகையில் அபிவிருத்தித் திட்டங்களுக்கு அவர்களின் ஒத்துழைப்பு நன்றாகவே கிடைக்கின்றது என்பதை குறிப்பிட முடியும்.

உண்மையில் வடக்கில் உள்ள



தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் பெரும் புரிந்துணர்வுடன் செயற்படுகின்றனர். மக்களுக்கான செயற்திட்டங்களில் அவர்கள் ஒத்துழைப்புடன் செயல்படுகின்றனர் என்பதைக் குறிப்பிட வேண்டும். கிழக்கில் அவ்வாறான நிலை காணப்படவில்லை-என்றார்.

### யாழ்., கிளிநொச்சி மாவட்டங்களில்

# ஒன்பது பாடசாலைகளை உடைத்து இலத்திரனியல் பொருட்கள் திருட்டு

## இளைஞர்கள் மூவர் கைது



யாழ்ப்பாணம், ஏப்.19

**யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் 9 பாடசாலைகளை உடைத்து 40 லட்சம் பெறுமதியான இலத்திரனியல் கற்றல் உபகரணங்களை திருடிய குற்றச்சாட்டில் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.**

யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்பு பொலிஸ் பிரிவினரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை, முழங்காவில், குமுழமுனை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞர்கள் மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் மூவரும் இணைந்து கடந்த நான்கு மாதங்களில் யாழ்ப்பாணம் மானிப்பாய், காங்கேசன்துறை, சாவகச்சேரி மற்றும் பூநகரி பொலிஸ் பிரிவுகளில் உள்ள 9 பாடசாலைகளை இரவு வேளைகளில் உடைத்து பெறுமதியான இலத்திரனியல் கற்றல் உபகரணங்களை திருடியுள்ளனர். திருடிய பொருட்களில் ஒரு பகுதியை விற்பனை செய்தும் உள்ளனர்.

செம்மணியில் வைத்து சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் மேலும் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

சாவகச்சேரி மகளிர் கல்லூரி, புன்னாலைக்கட்டுவன் சித்திவிநாயகர் வித்தியாலயம், மாவிட்டபுரம் வீமன்காமம் மகா வித்தியாலயம், கைதடி கலைவாணி வித்தியாலயம், கட்டுடை சைவ வித்தியாலயம், இளவாலை மெய்கண்டான் வித்தியாலயம், கீரிமலை வலித்தூண்டல் றோ.க.த.க பாடசாலை மற்றும் பூநகரி மத்திய கல்லூரி ஆகியவற்றிலேயே சந்தேகநபர்களால் பொருள்கள் திருட்டப்பட்டுள்ளன.

இந்தப் பாடசாலைகளில் இரண்டில் இரு தடவைகள் திருட்டுப் போயுள்ளன.

ஒளி எறிவு படக் காட்டமைவு (Projector), கணினிகள், அதிதிறன் பலகைகள் (Smart Board), மடிகணினிகள் உள்ளிட்ட 40 லட்சம் பெறுமதியான பொருள்கள் சந்தேக நபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர்கள் திருட்டுக்குப் பயன்படுத்தியதாக முழங்காவிலைச் சேர்ந்தவரிடமிருந்து பட்டா படி வாகனம் ஒன்றும் வட்டுக்கோட்டையைச் சேர்ந்தவரிடமிருந்து முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கிள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

பாடசாலை உபகரணங்களை அடையாளம் காண்பிக்க அதிபர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் மூவரும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உஜித் எம்.பி. லியனகேயின் கீழான மாவட்டக் குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவின் பதில் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் ஆர்.பிரதீப் தலைமையிலான அணியினரே இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர். (அ-3)

# அன்னை பூபதியின் நினைவு தினத்தை அவரது சமாதியில் அனுஸ்டித்தால் சிறை

## காத்தான்குடி பொலிஸார் எச்சரிக்கை

மட்டக்களப்பு, ஏப்.19

அன்னை பூபதியின் நினைவு தினத்தை அவரது சமாதிக்கு சென்று அனுஸ்டித்தால் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுவீர்கள் என காத்தான்குடி பொலிஸார் தம்மிடம் தெரிவித்துள்ளதாக அன்னை பூபதியின் மூத்த மகள் திருமதி லோகேஸ்வரன் சாந்தி தெரிவித்தார்.

நேற்று மட்டக்களப்பில் உள்ள மட்டு. ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாவலடியில் உள்ள எங்களது அன்னையின் நினைவு தினத்தினை நாங்கள் கடந்த மூன்று வருடத்திற்கு மேலாக அனுஷ்டித்துவருகின்றோம். ஆனால் இன்று எங்களது குடும்பத்தை அங்கு சென்று அனுஸ்டிக்க வேண்டாம் எனவும் மீறி அனுஷ்டித்தால் கைதுசெய்யப்படுவீர்கள் என காத்தான்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

நாங்கள் எங்களது தாயின் இறப்பை அவரை புதைத்துள்ள இடத்தில் அனுஷ்டிப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதானது மிகவும் கவலைக்குரியது. இது அரசியல்சார்ந்த செயல்பாடு அல்ல. அன்னை பூபதி எனது தாயார். எனது தாயாரின் இறப்பினை நாங்கள் நினைவு கூருகின்றோம். அதில் எந்தவித பயங்கரவாத செயற்பாடும் இல்லை.

எனது தாயார் அன்னையர் முன்னணி என்ற அமைப்பின் ஊடாக இந்திய இராணுவத்திற்கு எதிராகவே போராடி உயிர் துறந்தார். அவர் ஆயுதம் ஏந்தி எந்த போராட்டத்தினையும் நடத்தவில்லை. இந்த நாட்டிலிருந்து இந்தியப் படையினரை வெளியேற்றவே போராடினார். அவ்வாறானவரை யாரும் பயங்கரவாதியாக சித்திரிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கின்றோம்.

நாங்கள் எந்த அரசியல் கட்சியுடனும் இணைந்து எமது தாயாரை நினைவுகூரவில்லை. நாங்களும் எங்களும் குடும்பமுமே அவரை நினைவு கூருகின்றோம். இவ்வாறான நிலையில் எங்களை குறித்த நினைவினை செய்யவேண்டாம் என தெரிவிப்பது கவலைக்குரியது.

இன்று உலகம் எங்கும் எங்கள் தாயாருக்கு நினைவு தினம் நடாத்தப்பட்டுவரும் நிலையில் அவரது சமாதியில் எங்களுக்கு நினைவு தினம் நடாத்தமுடியாமல் இருப்பது வேதனையளிக்கின்றது-என்றார்.

### மேலும் பலருக்கு தொற்றுறுதி:

# குருநாகல் பகுதியில் பயணக்கட்டுப்பாடு!

கொழும்பு, ஏப். 19

பலருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டதை அடுத்து குருநாகல் மாவட்டத்தின் ஒரு பகுதியில் பயணக் கட்டுப்பாடு நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது.

குருநாகல் - கனேவத்த சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் தித்தவெல்காய பகுதியில் பயணக் கட்டுப்பாடு விடுக்கப்பட்டுள்ளது.

தித்தவெல்காய பகுதியில் 29 பேர் கொரோனா தொற்றுக்கு இலக்கானதால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக கனேவத்த சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் நாரத ரணசிங்க தெரிவித்துள்ளார்.அப்பகுதியில் 70 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனைகளில் 29 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

64 குடும்பங்களைச் சேர்ந்த 267 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக கனேவத்த சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

# சகல பாடசாலைகளும் இன்று மீண்டும் திறப்பு

கொழும்பு,ஏப்.19

தமிழ் - சிங்கள புத்தாண்டு விடுமுறையைத் தொடர்ந்து இலங்கையிலுள்ள அனைத்து அரசாங்க பாடசாலைகள் மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகள் இன்று திங்கள்கிழமை முதல் வழமைப்போன்று மீளத் திறக்கப்படவுள்ளன.

மேலும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி பாடசாலைகளை ஆரம்பிப்பது தொடர்பான முன்னைய சுற்றறிக்கைக்கு அமைய அனைத்து பாடசாலைகளிலும் கல்வி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதேவேளை, மேற்கு மாகாணத்திலும் முன்பள்ளிகள் மற்றும் தனியார் பாடசாலைகள் இன்று முதல் மீண்டும் திறக்கப்படும் என அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயிரம் ரூபாவைக்கொண்டு உழுந்துகூட வாங்கமுடியாது

## இராதாகிருஸ்ணன் விளாசல்



கொழும்பு, ஏப். 19

தற்போதைய அரசாங்கத்தில் ஊழலும், இலஞ்சமும் நிறைந்து போயுள்ளதாக மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான வே.இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

மலையக மக்கள் முன்னணியின் இளைஞர் மாநாடு நேற்று முன் தினம் நுவரெலியா சினிசிட்டா மண்டபத்தில் நடைபெற்றது.

இம்மாநாட்டில் தலைமை தாங்கி உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

'மலையக மக்கள் முன்னணி எப்போதும் வடக்கு கிழக்குடன் சுமூகமான தொடர்பை கொண்டுள்ளது. அதனடிப்படையிலேயே பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியனை அழைத்திருந்தோம். ஆனால் அவர் தவிர்க்க முடியாத காரணத்தினால் வரவில்லை. அதேபோன்று தான் ஹரீன் பெர்ணான்டோவும் வரவில்லை. கடந்த தேர்தலில் இளைஞர்களே அதிகளவில் ஆதிக்கம் செலுத்தினர். மலையகத்திலும் ஒரு ஜீவனுக்கு இளைஞர்கள் வாக்களித்தனர்.

மறுபக்கத்தில் மற்றுமொரு யுவதிக்கும் பதினேழாயிரம் வாக்குகள் வரை கிடைத்தது. ஆனால் அவை அனைத்தும் இன்று வெற்று வேட்டாக போயுள்ளது. தற்போதைய அரசாங்கம் பல விடயங்களில் சிக்கியுள்ளது. எல்லாவற்றிலும் ஊழலும், இலஞ்சமும் நிறைந்துள்ளது.

அதேபோல் எல்லாவற்றிலும் கலப்படம் உள்ளது. தேங்காய் எண்ணெய் போன்றவற்றிலும் கலப்படம் நிறைந்துள்ளது. சீனியில் ஊழல், பருப்பில் ஊழல் என அனைத்திலும் ஊழல் கலந்துள்ளது. தற்போது எமது கடல் வளத்தை மூடி சீனாவுக்கு கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.


இவ்வாறு நாட்டை விற்கும் செயற்பாடு எங்கு முடியப்போகின்றது என தெரியவில்லை. சஜித்தின் தோல்விக்கு உட்கட்சி மோதலும் முக்கியமானது. அதன் பிறகுதான் சிறுபான்மை மக்களையும் இணைத்து ஐக்கிய மக்கள் சக்தி உருவாக்கப்பட்டுள்ளது. முன்னர் ஆட்சி பீடம் ஏறும் தரப்பினரை தீர்மானிக்கும் சக்தியாக சிறுபான்மையினர் காணப்பட்டனர்.

ஆனால் இன்று சிறுபான்மையினர் துவேசம் மூலம் நசுக்கப்பட்டு வருகின்றனர். இப்போது உளுந்து, பாசிப் பயறு உள்ளிட்ட பொருட்களை வாங்க முடியாதுள்ளது. இதனால் இன்று உளுந்து வடை, தோசை, சூசியம் போன்ற திண்பண்டங்களை சாப்பிட முடியாதுள்ளது. இன்றும் 1000 ரூபா சம்பளத்தை முழுமையாக சிலர் பெற்றுக்கொள்ளவில்லை.

முக்கியமாக அரசாங்க தோட்டங்களில் 1000 ரூபா அதிகரிப்பு கொடுக்கப்படவில்லை. இன்று எல்லா சலுகைகளும் இல்லாது போயுள்ளது. தற்போதைய நிலையில் 1000 ரூபாவைக்கொண்டு உளுந்தை கூட வாங்க முடியாது. எனவே எமது இளைஞர்கள் இது குறித்து சிந்திக்க வேண்டும்-என்றார்.

# நாட்டில் புதிய மாநிலம் உருவாகுவது தெளிவு!

## சோபித தேரர் எச்சரிக்கை



**கொழும்பு, ஏப்.19**

**நாட்டில் புதிய மாநிலம் உருவாக்கப் போகின்றமை தெளிவாக தெரிகின்றது என ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.**

**எம்பிலிப்பிட்டியவிலுள்ள போதிராஜா தர்ம நிறுவனத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.**

குறித்த ஊடக சந்திப்பில் ஓமல்பே சோபித தேரர் மேலும் கூறியுள்ளதாவது:-

நாங்கள் அனைவரும் முப்பது வருடங்களாக கடுமையான சோகத்தில் இருந்தோம்.

புலிகளுடனான போராட்டம் முப்பது வருடத்துடன் நிறைவடைந்தது. உண்மையில், இலங்கை மக்களாகிய நாங்கள் வெற்றியடைந்துள்ளோம்.

ஆனால் தற்போது எமது வளங்கள் ஏனைய மூலோபாய வழிமுறைகள் ஊடாக கைப்பற்ற முயற்சிகள் இடம்பெற்று வருகின்றது.

நாங்கள் அதை ஒரு துறைமுக நகரமாகப் பார்க்கிறோம். மேலும் நவீன சீன காலனி துறைமுக நகரம் எவ்வாறு உருவாக்கப்பட்டது என்பதையும் அதைத் தொடர முன்வைக்கப்பட்ட திட்டங்களையும் நாங்கள் பார்த்தோம்.

மேலும் புதிய சட்டத்தின் கீழ் போர்ட் சிற்றி இலங்கைக்கு சொந்தமானது அல்ல என்பதுடன் இதனை ஒரு சீன மாகாணமாகவே பார்க்கின்றோம்

இந்த நாட்டில் மற்றொரு மாநிலமொன்று உருவாக்கப் போகிறது என்பது மிகத் தெளிவாக தெரிகிறது. இந்த துறைமுக நகர திட்டத்தின் கீழ் புதிய சீன காலனித்துவ கொலனி நிறுவப்பட உள்ளது.

மேலும் புதிய சீன கொலனியாக அறிமுகப்படுத்தப்படவுள்ள இந்த துறைமுக நகரம், நாட்டின் கட்டுப்பாட்டில் இல்லை. அதற்கு முகவர்கள் யாரும் இல்லை.

அந்த நிலத்திற்கு இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கான பிரதிநிதித்துவமோ கட்டுப்பாடோ இல்லை. ஆகவே, உருவாக்கப்படவுள்ள புதிய சீன காலனி நிராகரிக்கப்பட வேண்டும். இது இந்த நாட்டில் நிறுவப்படக்கூடாது-என்றார்.

# ஓமந்தை சோதனை சாவடியில் கெடுபிடி

வவுனியா, ஏப். 19

வவுனியா, ஓமந்தை சோதனைச் சாவடி ஊடாக செல்லும் வாகனங்கள் மீதான சோதனைக் கெடுபிடிகள் அதிகரித்துள்ளதாக பயணிகள் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, ஓமந்தை ஏ-9 வீதியில் உள்ள சோதனைச் சாவடியில் நேற்று முன் தினம் மாலை மரம் கடத்தலில் ஈடுபட்ட வாகனம் ஒன்று இராணுவத்தினர் வழிமறித்தபோது நிறுத்தாது இரு இராணுவத்தினர் மீது மோதியதுடன், அங்கிருந்து தப்பிச் சென்று பாலம் ஒன்றில் மோதி விபத்துக்குள்ளாயிருந்தது.

இதில் இரு இராணுவத்தினர் படுகாயமடைந்திருந்ததுடன், வாகனச் சாரதி தப்பியோடியிருந்தார்.

இதனையடுத்து, குறித்த இராணுவ சோதனைச் சாவடி ஊடாக செல்லும் மோட்டர் சைக்கிள்கள், பஸ்கள் மற்றும் ஏனைய வாகனங்கள் என அனைத்து வாகனங்களும் மறிக்கப்பட்டுச் சோதனை மேற்கொள்ளப்படுவதுடன், சில மணிநேரம் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் பயணிகள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் குறித்த இராணுவ சோதனைக் கெடிபிடிகளால் பயணிகளும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.



# அஸாத் ஸாலி குறித்து சிறப்பு விசாரணைகள்

## சரத் வீரசேகர கூறுகிறார்



கொழும்பு, ஏப். 19

மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அஸாத் ஸாலி நாட்டில் தீவிரவாதத்தை வளர்த்துப் பாதுகாத்தாரா என்பது தொடர்பான விவரங்களை அறிய சிறப்பு விசாரணை தொடங்கப்பட்டுள்ளது எனப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"அஸாத் ஸாலி ஆளுநர் பதவியில் இருந்தவேளையில் தீவிரவாதத்தை வளர்ப்பதற்கும், அது தொடர்பான பிரசாரங்களை மேற்கொள்வதற்கும் எவ்வாறு பாடுபட்டார் என்பது குறித்த தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக சி.ஐ.டி. மற்றும் ரி.ஐ.டி. இணைந்து சிறப்பு விசாரணையைத் தொடங்கியுள்ளன.

மாவனெல்லயில் புத்தர் சிலைகள் உடைக்கப்பட்ட விவகாரம் மற்றும் வனாத்தவில்லு பிரதேசத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெடிபொருட்களுடன் தொடர்புடைய சந்தேகநபர்களைப் பாதுகாத்த குற்றச்சாட்டில் முன்னாள் ஆளுநருக்கு எதிராக ஆதாரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

மேலும், முஸ்லிம் பள்ளிவாசல்கள், உள்ளூர் மதரஸாக்களில் தீவிரவாதக் கருத்துக்களைப் பரப்புவதற்கு உதவியது போன்ற குற்றச்சாட்டின் பேரிலும் அஸாத் ஸாலி விசாரிக்கப்படுகின்றார்" - என்றார்.



# மன்னாரில் ஒரு கோடி பெறுமதியான கஞ்சா பொதிகளுடன் மூவர் சிக்கினர்!

மன்னார், ஏப். 19

மன்னார், இலுப்பைக் கடவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிப்பி ஆறு பகுதியில் கேரளக் கஞ்சா பொதிகளுடன் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த கஞ்சா பொதிகள், டிப்பர் வாகனம் ஒன்றில் மறைத்துக் கொண்டுசெல்லப்பட்ட நிலையில், நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை மன்னார் பொலிஸ் நிலைய ஊழல் தடுப்புப் பிரிவினரால் அவை கைப்பற்றப்பட்டுள்ளன.

கடற்படையின் புலனாய்வுத் தகவலுக்கமைய மன்னார் மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் கஸ்தூரி ஆராச்சியின் பணிப்பில், மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜெயதிலக, உப பொலிஸ் பரிசோதகர் திலங்க தலைமையிலான குழுவினரே இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

இதன்போது, 89 கிலோ மற்றும் 355 கிராம் நிறையுடைய இலங்கை மதிப்பில் கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபா பெறுமதியான கேரளா கஞ்சா பொதிகளே கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை, கஞ்சா கடத்தலுக்காகப் பயன்படுத்தப்பட்ட டிப்பர் வாகனம் பொலிஸாரால் கையகப்படுத்தப்பட்டுள்ளதுடன் மூன்று சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் வவுனியாவைச் சேர்ந்தவர்கள் என்பதுடன் இருவர் கூமாங்குளம் பகுதியையும் மற்றையவர் தவசிகுளம் பகுதியையும் சேர்ந்த 25, 44 மற்றும் 31 வயதுடையவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஜீவன் தொண்டமானுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்!

ஹற்றன், ஏப். 19

பெண்களை இழிவாக பேசியதாக தெரிவித்தும் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் பகிரங்கமாக மன்னிப்புக் கோர வேண்டும் எனக் கோரியும் ஹஹற்றன் நகரில் ஆர்ப்பாட்டமொன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

ஹற்றன் மல்லியப்பு சந்தியில் மகளிர் அமைப்புகளின் ஏற்பாட்டில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அண்மையில் கட்சி ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றிய இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை தாக்கி பேசிய சமயம் பெண்களை இழிவு படுத்தும் வகையில் கருத்துக்களை பரிமாறியதாக அவர் மீது பரவலாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் பல்வேறு மலையக அமைப்புகள் தமது கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருவதுடன் சமூக வலைத்தளங்களிலும் இவ் விவகாரம் பேசு பொருளாக மாறியுள்ளது.

இதனால் ஜீவன் தொண்டமான் மலையக பெண்களிடம் பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும் எனக் கோரியே இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அண்மையில் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# துறைமுக நகர சட்ட வரைவு அரசமைப்பிற்கு உட்பட்டது!

## பொதுஜன பெரமுன கூறுகிறது

கொழும்பு, ஏப்.19

**கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக் குழு சட்ட வரைவு நாட்டின் அரசியலமைப்பிற்கு உட்பட்டுள்ளதா சட்டமா அதிபர் கூறியுள்ளதாக இலங்கை பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் ஜெயந்த வீரசிங்க தெரிவித்துள்ளார்.**

நேற்று ஒரு ஊடக சந்திப்பில் பேசிய அவர், இந்த வரைபு அரசமைப்பை மீறவில்லை என்றும் ஒப்புதலுக்காக பாராளுமன்றத்திற்கு அனுப்பப்படலாம் என்றும் கூறினார்.

துறைமுக நகரம் ஒரு சீன நிறுவனத்தால் உருவாக்கப்பட்டிருந்தாலும், அது தொடர்பான அனைத்து விஷயங்களையும் ஆணைக்குழுவின் கீழ் கொண்டு வந்துள்ள நிலையில், அது எவ்வாறு சீன ஆட்சியின் கீழ் உள்ளது என்று அவர் கேள்வி எழுப்பினார்.

ஆணைக்குழு மூன்று ஆண்டுகளுக்கு நியமிக்கப்படும் என்றும், அதன் உறுப்பினர்கள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவால் நியமிக்கப்படுவார்கள். அவரால் மட்டுமே ஆணைக்குழுவை நியமிக்கவும் ரத்து செய்யவும் அதிகாரம் உள்ளது. முடிவுகளை எடுக்கும் போது சீன அரசாங்கங்களின் ஒப்புதல் தேவையில்லை. ஆணைக்குழுவில் சீன உறுப்பினர்கள் அங்கம் வகிக்கமாட்டார்கள் என்றும் அவர் கூறினார்.

சட்ட வரைவில் 73 பகுதிகள் உள்ளன. சீன நாட்டவர் ஆணைக்குழுவில் நியமிக்கப்பட வேண்டுமென ஒரு இடத்திலும் சொல்லப்படவில்லையென்றார்.

செயல்திறனை அடிப்படையாகக் கொண்டு ஆணைக்குழுவின் காலம் நீட்டிக்கப்படும் என்றும் ஜெயந்த வீரசிங்க குறிப்பிட்டார். (அ)

# 5 நாள் விபத்துகளில் 52 பேர் உயிரிழப்பு!

கொழும்பு, ஏப். 19

கடந்த ஐந்து நாட்களில் வீதி விபத்துக்களில் 52 பேர் மரணித்துள்ளனர்.

இந்த காலகட்டத்தில் 399 வீதி விபத்துக்களும் பதிவாகியுள்ளன. 669 பேர் காயமடைந்தனர்.

மதுபோதையில் வாகனம் ஓட்டுதல் மற்றும் வீதி விபத்து குற்றச்சாட்டுகள் தொடர்பாக சுமார் 2,242 வாகனங்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. அவற்றில் 1,429, மோட்டார் சைக்கிள்கள் உள்ளடங்குகின்றன.

552 முச்சக்கர வண்டிகள், 128 கார்கள், 38 லொரிகள், 30 வான்கள், 28 இரட்டை பயன்பாட்டு வாகனங்கள், 22 கப் வண்டிகள், 12 பேருந்துகள், 2 சைக்கிள்கள் மற்றும் ஒரு கொள்கலன் ஆகியவை விபத்துக்களில் சிக்கியுள்ளன.



# துறைமுக நகர சட்ட வரைவு குறித்து மகாநாயக்கர்களுக்கு விளக்கிய அரசு

கொழும்பு, ஏப். 19

கொழும்பு துறைமுக பொருளாதார ஆணைக்குழு சட்ட வரைபு குறித்து அரசாங்கத்தின் அரசாங்கத்தின் பிரதிநிதிகள் மகாநாயக்கர்களுக்கு விளக்கமளித்துள்ளனர்.

நேற்று கண்டிக்கு சென்ற அரசாங்கத்தின் பிரதிநிதிகள் மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீட மகாநாயக்கர்களிடம் சட்ட வரைவு குறித்து விளக்கமறித்தனர்.

அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மற்றும் இராஜாங்க அமைச்சர் அஜித் நிவார்ட் கப்ரால் உள்ளிட்ட பல அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த குழுவில் அங்கம் வகித்தனர்.

மகாநாயக்கர்களுடனான சந்திப்பை தொடர்ந்து ஊடகங்களுடன் பேசிய இராஜாங்க அமைச்சர் கப்ரால், ஜனாதிபதி மற்றும் பிரதமர் சார்பாக புதிய சட்டவரைபை பற்றி மகாநாயக்கர்களிற்கு விளக்கமளித்ததாக தெரிவித்தார்.

ஏதேனும் கவலைகள் இருப்பில் தெரிவிக்குமாறு மகாநாயக்கர்களிடம் தெரிவித்ததாக அவர் குறிப்பிட்டார்.

சட்டங்களை அமல்படுத்துவது குறித்து தலைமைப் மகாநாயக்கர்கள் ஆலோசனை வழங்கியதாக இராஜாங்க அமைச்சர் கூறினார்.

வரவிருக்கும் வாரத்திற்குள் இந்த வரைவு குறித்து பொது மக்களுக்கு விளக்க அரசு நடவடிக்கை எடுக்கும் என்று கப்ரால் குறிப்பிட்டார்.

ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல பேசிய போது,

ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட முயற்சியாக வரைபு மீது சுமத்தப்பட்ட ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் மூலம் அரசாங்கத்தின் திட்டத்தை குறைமதிப்பிற்கு உட்படுத்த முடியாது.

முதலீட்டாளர்களுக்கு ஏற்ற சூழலை உருவாக்க வேண்டும். தற்போது முழு உலகமும் அவ்வாறு செய்கின்றன.

பொய்யான குற்றச்சாட்டுகளுக்குப் பின்னால் ஒரு அரசியல் சக்தி இருக்கிறது. ஏனெனில் இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டால் எதிர்காலம் இருக்காது என்று எதிர்க்கட்சிகள் உணர்ந்துள்ளன.

மகா சங்கத்திற்கு விஷயங்களை விளக்கி, மக்களுக்கு நீதி வழங்குவதற்காக, வரைபு தொடர்பான எந்தவொரு தனி நபருடனும் விவாதம் நடத்த அரசாங்கம் தயாராக உள்ளது.

பொருளாதாரத்தை மேம்படுத்தவும், சுகாதாரம் மற்றும் கல்விக்கான பட்ஜெட்டை அதிகரிக்கவும் இது மக்களுக்கு ஒரு வாய்ப்பாகும்.

அரசாங்கம் வாக்குறுதியளித்தபடி மேலும் 10,000 மாணவர்களை பல்கலைக்கழகங்களில் அனுமதித்துள்ளது, அதே நேரத்தில் இலக்கு 100,000 ஆகும். இது சம்பந்தமாக பொருளாதார வலிமை அவசியம்.

தங்களுக்கு அரசியல் எதிர்காலம் இருக்காது என்ற அச்சத்தில் எதிர்க்கட்சி இந்த திட்டத்தை நாசப்படுத்த முயற்சிப்பதாகவும், குற்றச்சாட்டுகள் வருந்தத்தக்கது-என்றார்.

# இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் தகவல் தொடர்பை நவீனமாக்கும் சீனா

கொழும்பு, ஏப். 19

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் தகவல் தொடர்பு வசதிகளை மேம்படுத்த சீன அரசு இலங்கைக்கு மானியம் வழங்க உள்ளது.

சீன மானியத்தின் ஒரு பகுதியாக, மூத்த அதிகாரிகள் மற்றும் பொலிஸ் நிலையங்களுக்கிடையேயான தகவல் தொடர்புகளை மேம்படுத்துவதற்காக டெட்ரா - டெரெஸ்ட்ரியல் ட்ரங்கட் ரேடியோ (TETRA — Terrestrial Trunked Radio) என அழைக்கப்படும் பரவலாக பயன்படுத்தப்படும் தகவல் தொடர்பு வசதி வழங்கப்படும். ஆரம்பத்தில் மேற்கு மாகாணத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களை அடிப்படையாக கொண்டு திட்டம் ஆரம்பிக்கப்படும்.

சீன பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் வீ ஃபெங்கே இந்த மாத இறுதியில் இலங்கைக்கு வருகை தரும் போது இந்த மானியம் அதிகாரபூர்வமாக வழங்கப்படும். (அ)

# பன்சேனை காட்டுப்பகுதியில் இயங்கிய கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை

மட்டக்களப்பு, ஏப். 19

மட்டக்களப்பு மாவட்டத்தின் கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பன்சேனை காட்டுப்பகுதியில் இயங்கிவந்த கசிப்பு உற்பத்தி நிலையம் நேற்று மாலை பொலிஸாரினால் முற்றுகையிடப்பட்டுள்ளதுடன் பெருமளவான கசிப்பு உற்பத்தி மூலப்பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன.

கொக்கட்டிச்சோலை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில் பன்சேனை, நல்ல தண்ணிக்குளம் பகுதியில் உள்ள காட்டுப்பகுதியிலேயே இந்த முற்றுகை முன்னெடுக்கப்பட்டது.

சட்ட விரோத போதைப் பொருள் பாவனையினை தடுக்கும் வகையில் நாடெங்கும் முன்னெடுக்கப்பட்டுவரும் விசேட நடவடிக்கையின் கீழ் கொக்கட்டிச்சோலை பொலிஸாரினால் தொடர்ச்சியான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. படுவான்கரை பகுதியில் சட்ட விரோதமான முறையில் கசிப்பு உற்பத்திகள் முன்னெடுக்கப்படுவதனால் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த நிலையில் கொக்கட்டிச்சோலை பொலிஸ் நிலையத்தின் பதில் பொறுப்பதிகாரி ஐ.பி.மக்கீம் தலைமையில், பெருங்குற்ற தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி சப்இன்ஸ்பெக்டர் அமரசிறி,போக்குவரத்து பிரிவு பொறுப்பதிகாரி சப் இன்ஸ்பெக்டர் திஸாநாயக்க மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களான ஹாரூன், விஜயசேகர, ரமேஸ், மகேஸ், சந்திரகுமார்,ரத்னமல் ஆகியோர் கொண்ட குழுவினர் இந்த விசேட நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இந்த முற்றுகையின்போது கசிப்பு உற்பத்தி செய்வதற்கான பொருட்கள், கசிப்பு உற்பத்திக்கான மூலப்பொருளான 6200 லீற்றர் கோடா மீட்கப்பட்டு அழிக்கப்பட்டதுடன் 30லீற்றர் ஸ்பீரீட்டும் மீட்கப்பட்டது.

குறித்த முற்றுகையின்போது குறித்த பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவர்கள் காட்டுக்குள் தப்பிச்சென்றுள்ளதாகவும் அவர்களை தேடும் பணிகள் முன்னெடுக்கப்படுவதாகவும் கொக்கட்டிச்சோலை பொலிஸார் தெரிவித்தனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழல் காப்பாளராக விவேக்கை நினைவு கூர்வதே இன்றைய நிலையில் அவசியம்



குமாரதாஸன், பாரிஸ்

“.. ஆயிரம் பெரியார்கள் பிறந்து வந்தாலும் உங்களைத் திருத்த முடியாதுடா..”

“.. இண்டைக்குச் செத்தா நாளைக்குப் பால்…”

இவை போன்ற பல சமூக சிந்தனை தூண்டும் நகைச்சுவை வசனங்களால் அறியப்பட்டவர் மறைந்துவிட்டார்.

கடந்த வியாழனன்று தமிழ்நாடு அரசின் சிறப்புத் தூதராக அரச மருத்துவமனையில் பகிரங்கமாகத் தடுப்பூசி ஏற்றிக் கொண்டார். பொதுமக்கள் தயக்கம் இன்றி ஊசி போட்டுக்கொள்ள வேண்டும் என்று விழிப்புணர்வூட்டி உரையாற்றினார். தடுப்பூசி பற்றிய அவரது பேச்சின் வீடியோ சமூக வலைத் தளங்களில் பகிரப்படுகின்றது. மறுநாள் வெள்ளிக்கிழமை திடீரென மூச்சிழந்து மருத்துவமனையில் சேர்க்கப்படுகிறார். சனிக்கிழமை விடிகாலை உயிரிழந்து போகிறார்.

தனது வாழ்வின் கடைசி நிமிடம் வரை மக்களை விழிப்பூட்டும் கருத்துக்களை கொண்டு வாழ்ந்தவர் விவேக். ஆனால் தடுப்பூசி ஏற்றி அடுத்த நாளே விவேக் திடீரென மயக்கமடைந்ததும் வடபழனி SIMS மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு 24 மணித்தியாலங்களுக்குள் உயிரிழந் தமையும் அவரது ரசிகர்கள் உட்பட சாதாரண மக்களிடையே கேள்விகளை எழுப்புவது தவிர்க்க முடியாதது.

விவேக்கின் மரணத்துக்கு தடுப்பூசியே காரணம் என்று நடிகர் மன்சூர் அலிகான் போன்றவர்கள் மருத்துவமனைக்கு முன்பாக நின்று குற்றச்சாட்டிக் குரல் எழுப்பி இருக்கின்றனர்.

உலகெங்கும் அஸ்ராஸெனகா போன்ற தடுப்பூசிகள் உருவாக்குகின்ற இரத்தக் கட்டிகள் காரணமாக மரணங்கள் பதிவாகி வருகின்றன. இந்த நிலையில் விவேக்கிற்கு ஏற்பட்ட லேசான உயர் இரத்த அழுத்தத்துக்கும் (mild elevated blood pressure) அவர் ஏற்றிக் கொண்ட வைரஸ் தடுப்பூசிக்கும் தொடர்பு இல்லை என்று அவருக்குச் சிகிச்சை அளித்த மருத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர்.

இருதயச் சிகிச்சைகளுக்காக ஒரு நாளேனும் மருத்துவமனை சென்றிராதவர் ஊசி ஏற்றிய மறுநாள் இருதயம் செயலிழந்து உயிரிழந்திருக்கிறார். பிரபலமான ஒருவரது இத்தகைய திடீர் சாவு சாதாரணமானவர்களிடையே ஊசிகள் பற்றிய அச்சங்களை எழுப்பவே செய்யும். தடுப்பூசிகள் மீதான நம்பிக்கை களை உருவாக்கும் முயற்சிகளுக்குப் பலத்த பின்னடைவை அது ஏற்படுத்தலாம். ஆனால் திக்குத் தெரியாத தொற்று நோயின் பயணத்தில் முடிவற்றுத் தொடர்கின்ற அவலங்களின் நடுவே மனித குலத்தின் முன் உள்ள ஒரே நம்பிக்கை இந்தத் தடுப்பூசி தான். அந்த நம்பிக்கையை மக்களிடம் விதைக்கவே விவேக் அரசு மருத்துவமனையில் பலர் முன்பாக ஊசி ஏற்றிக் கொண்டார்.

58 வயதான நடிகர் விவேக் 1950, 60 களில் தமிழக சினிமாவில் கோலேச்சிய நகைச்சுவைச் சிந்தனையாளர் என். எஸ் கிருஷ்ணனின் பெயரில் “சின்னக் கலைவாணர்” என்று அழைக்கப்பட்டுவந்தவர். விவேகானந்தன் என்ற பெயரில் ஓர் அரசுப் பணியாளராக அறியப்பட்ட விவேக் 1987 இல் “மனதில் உறுதிவேண் டும்” என்ற படத்தில் சிறு பாத்திரம் ஒன்றின் மூலமாக சினிமாவில் நுழைந்தார். 1990 களில் விவேக் தோன்றி நடித்த நகைச்சுவைப் பாத்திரங்கள் அடுத்த சில தசாப்த காலப் பகுதியில் அவருக்குத் தமிழக சினிமாவில் அசைக்க முடியாத ஓர் தளத்தைப் பெற்றுக் கொடுத்தன.

‘ரன்’, ‘பேரழகன்’,’ தூள்’, ‘அந்நியன்’, ‘சிவாஜி’ போன்ற படங்களில் விவேக் வழங்கிய நகைச்சுவைப் பாத்திரங்கள் அவருக்கு மிகுந்த பிரபல் யத்தை உருவாக்கின. விழிப்புணர்வு மிகுந்த கருத்துக்களை நாசூக்காக நகைச்சுவையுடன் வசனங்களாக்கு வதிலும், பிரபலமானவர்களது குரல்களில் மிமிகிரி பண்ணுவதி லும் விவேக் தனித்திறமை கொண்டிருந்தார். அவர் கதாநாயகனாகத் தோன்றி நடித்த படம் “சொல்லியடிப்பேன்”.

2009 இல் மத்திய அரசின் பத்மஸ்ரீ விருது விவேக்கிற்கு வழங்கப்பட்டது. இந்திய அணு அறிவியலாளரும் முன்னாள் ஜனாதிபதியுமாகிய ஏ.பி. ஜே.அப்துல் கலாம் அவர்களின் கொள்கை களையும் தனது சினிமா மூலம் பரப்பி வந்தவர். அப்துல் கலாமின் வேண்டுகோளை ஏற்றுப் பசுமை இயக்கம் ஒன்றை தொடக்கினார். தமிழகம் எங்கும் லட்சக்கணக்கான மரங்களை நடுகை செய்தார். அதன் மூலம் ஒரு சூழலியலாளராக முழு இந்தியாவினதும் கவனத்தை ஈர்த்தார்.

சமூக சீர்திருத்தக் கருத்துக்களுக்கும் சூழல் பேணும் விழிப்புணர்வுக்கும் நடிப்பை ஒரு நிஜமாகப் பயன்படுத்திய வர். மரங்களை நட்டு ஒக்சிஜனைப் பெருக்கியவர். தொற்று நோய்களுக்கும் இயற்கை அழிவுகளுக்கும் காரணமான சூழல் கட்டமைப்பு அழிவைத் தடுப்பதற்காக இறுதிவரை உழைத்தவர். மூளைக் காய்ச்சல் காரணமாகத் தனது ஒரே புதல்வனைப் பறிகொடுத்து நொந்து போன நிலையிலும் “கிறீன்கலாம்” மரம் நடும் இயக்கத்தைச் சளைக்காது தொடர்ந்தவர்.

சிறந்த நடிகர் என்பதற்கும் அப்பால் ஒரு சூழல் காப்பாளராக அவரை நினைவு கூர்வதே இன்றைய நிலைமையில் மிக அவசியமாக உள்ளது. ■

# இடிமின்னல்கள் இப்போது வீரியமாகத் தாக்குவதேன்?

முல்லைத்தீவில் ஒரேநாளில் மூவர் மின்னல் தாக்கி உயிரிழந்தனர் எனச் செய்திகள் வருகின்றன. கடந்த ஆண் டிலும் யாழ்ப்பாணத்தில் மின்னல் தாக்குதலால் பல மரணங்கள் நிகழ்ந்தன. இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் ஆண்டு தோறும் அதிக உயிரிழப்புகளை ஏற்படுத்துகின்ற இயற்கைச் சீற்றமாக இடிமின்னல் மாறிவருகின்றது.

முன்பொரு காலத்தில் உயர்ந்த இடங்களை மட்டுமே இலக்குவைத்து வந்த இடி மின்னல்கள் இப்போதெல்லாம் மனிதர் களது தலைவரை வந்து தாக்குகின்றன.

**இதற்குக் காரணம் என்ன?**

தரைக்கும் முகில்களுக்கும் இடையிலான ஒரு மின்சாரத் தெறிப்பே மின்னல் தாக்குதல். வளிமண்டலத்தில் இயற்கையாக ஏற்படுகின்ற நிகழ்வுதான் என்றாலும் பருவநிலை மாற்றத்தால் அது ஏனைய இயற்கைச் சீற்றங்கள் போன்று மாறுதலடைந்து வருகின்றது.

பூமியின் வெப்பம் அதிகரித்து வருவதே மின்னல்கள் வீரியமடையக் காரணம் என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள். புயல் மேகங்களுக்கு இடையே சதா ஆயிரக் கணக்கில் இடி மின்னல்கள் நிகழ்ந்தாலும் அவற்றில் அரிதாகச் சில மின் கடத்தல்களே தரையைத் தாக்குகின்றன.

ஆனால் மனித நடவடிக்கைகள் காரணமாக வெப்பம் அதிகரித்து வளிமண்டலம் அதிகளவு ஈரப்பதன் கொண்டதாக மாறுவதால் மின்னலின் தாக்கம் தரையை நோக்கிக் கடத்தப்படுவது “வழமைக்கு மாறாக” அதிகரித்து வருகிறது. கடந்த பத்து ஆண்டுகளில் மின்னல் தாக்குதல்கள் அதிகரித்திருப்பதாக காட்டும் ஆய்வு ஒன்றை தழரசயெட ளுஉநைஉந சஞ்சிகை அண்மையில் வெளியிட்டிருந்தது. ஒவ்வொரு ஒரு பாகை செல்சியஸ்(1°C) வெப்பநிலை அதிகரிப்புக்கும் மின்னல் தாக்குதல்கள் 12 வீதம் அதிகரிக்கின்றன. இதன் அர்த்தம் அமெரிக்கா போன்ற நாடுகளில் இந்த நூற்றாண்டின் இறுதி யில் மின்னலின் தாக்கங்கள் 50 வீதத் தால் உயரும் என்பதாகும்-என்று அதில் தெரிவிக்கப்படுகிறது.



2010 - 2020 காலப்பகுதியில் வெப்பம் அதிகரிப்பை ஆய்வு செய்த வோஷிங்டன் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் பூமியின் ஆர்ட்டிக் பகுதி வட்டகை நாடுகளான வடக்கு ரஷ்யா, கனடா, அலாஸ்கா, ஐரோப்பா பகுதிகள் அதிக மின்னல் தாக்குதல்களைச் சந்திக்கத் தயாராக வேண்டும் என்று எச்சரித்துள்ளனர்.

இந்தப்பகுதியில் 2010 ஆம் ஆண்டு 15 ஆயிரமாகக் கணக்கிடப்பட்ட மின்னல் தாக்குதல்கள் 2020 இல் ஒரு லட்சத்து 50 ஆயிரமாக அதிகரித்துள்ளன. பூமியின் இதர பகுதிகளை விட ஆர்ட்டிக் பிரதேசமே வேகமாக வெப்பமடைந்து வருகிறது.

நீண்டகாலமாக கடலில் பனி உருகிவருவதும் அதிகமான கப்பல் போக்குவரத்துகளும் ஏற்படுத்தப்போகின்ற இடி, மின்னல், புயல் மழை ஆபத்துக்களை ஆர்ட்டிக் நாடுகளில் வசிப்போர் அறியாதவர்களாக உள்ளனர்-என்று அறி வியலாளர் ஒருவர் எச்சரிக்கிறார்.

மின்னல் தாக்கம் ஏற்படுத்தும் பாரிய அழிவாக காடுகள் தீக்கிரையாகின்றன. காட்டு விலங்குகளும் தாவர இனங்களும் அழிகின்றன. இதைவிட சமீப காலமாக மனித உயிரிழப்புகள் அதிகரிக்கின்றன. இந்தியாவின் வறிய மாநிலமான பீஹாரில் கடந்த வருடம் கோடையின் போது பத்து நாட்களில் 147 பேர் மின்னல் தாக்கி உயிரிழந்தனர்.

உலகை திரும்பிப் பார்க்க வைத்த மிக அதிக உயிர்ச் சேதம் அதுவாகும்.

கிராமவாசிகளும் கமக்காரர்களுமே அதிக எண்ணிக்கையில் உயிரிழக்கின்றனர். வெளியான இடங்களைத் தவிர்த்தல் போன்ற பொதுவான பாதுகாப்பு ஆலோசனைகளால் அல்லது இடி தாங்கிகள், மின்னல் கண்டறி கருவிகள் (lightning detection systems) போன்றனவற்றால் மட்டும் இனி மின்னலால் ஏற்படும் பாதிப்புகளைத் தடுத்துவிட முடியாது என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> **இங்குள்ள மக்கள் பல ஆண்டுகள் நீடித்த யுத்தத்தால் இடம் பெயர்ந்து சமீப ஆண்டுகளிலேயே தமது சொந்த நிலங்களுக்குத் திரும்பி வருகின்றனர். எனினும் தலைமுறை தலைமுறையாக தமிழர்கள் வசித்த, விவசாயம் செய்துவந்த நிலங்கள் அரச திணைக்களங்களால் ஆக்கிரமிக்கப்படுவதாக அவர்கள் கவலை வெளியிடுகின்றனர்.**



# கிழக்கில் தொடரும் ஆக்கிரமிப்பு! ஆபத்தில் தமிழர்களின் இருப்பு!


மட்டக்களப்பில் தமிழர் நிலங்களை ஆக்கிரமித்து குடிப்பரம்பலை மாற்றியமைக்கும் திட்டமிட்ட செயல்பாடுகள் அரச திணைக்களங்கள் ஊடாக துரிதமாக இடம்பெற்று வருவதாக அந்த மாவட்ட மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

மட்டக்களப்பு - மாவடிஓடை பகுதியில் இரவோடு இரவாக எல்லைக் கற்களை நாட்டி ஆக்கிரமிப்பு நடவடிக்கையில் வனவள திணைக்கம் ஈடுபட்டு வருகிறது. கடந்த சில மாதங்களாகவே இவ்வாறான நடவடிக்கை தொடர்கிறது என அவர்கள் கூறுகின்றனர்.

நாங்கள் தூங்கச் சென்ற பின்னர் இரவோடு இரவாக எல்லைக் கற்களை நாட்டி விடுகிறார்கள். விடிந்து எழுந்து பார்த்ததும் எங்கள் நிலம் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும். பின்னர் அந்த நிலம் வனவளத் திணைக்களத்துக்குச் சொந்தமானது எனக் கூறி எங்கள் நிலங்களுக்கும் செல்லும் உரிமை எமக்கு மறுக்கப்படுகிறது என மாவடிஓடை பகுதியைச் சேர்ந்த 51 வயதான மரிமுத்து ரவீந்திரகுமார் கூறுகிறார்.

இங்குள்ள மக்கள் பல ஆண்டுகள் நீடித்த யுத்தத்தால் இடம்பெயர்ந்து சமீப ஆண்டுகளிலேயே தமது சொந்த நிலங்களுக்குத் திரும்பி வருகின்றனர். எனினும் தலைமுறை தலைமுறையாக தமிழர்கள் வசித்த, விவசாயம் செய்துவந்த நிலங்கள் அரச திணைக்களங்களால் ஆக்கிரமிக்கப்படுவதாக அவர்கள் கவலை வெளியிடுகின்றனர்.

மாவடிஓடை கிராமத்தில் தற்போது 36 தமிழ் குடும்பங்கள் உள்ளன. எனினும் இந்தக் கிராமத்துக்குச் செல்ல ஒழுங்கான வீதி இல்லை. 3 கிலோ மீற்றர்கள் நீளமான கிராமத்து வீதியைக் கடந்து செல்ல 45 நிமிடங்கள் ஆகும் என்கிறார் கிராம வாசியான ரவீந்திரன். இங்கு ஒவ்வொரு குடும்பங்களுக்கும் 5 ஏக்கருக்கும் குறைவான நிலங்கள் உள்ளன. அதில் விவசாயம் செய்தே அவர்கள் வாழ்க்கையைக் கொண்டு நடத்துகின்றனர்.



ஆனால், வனவளத் திணைக்களத்தினர் இங்கு தினந்தினம் பிரச்சினை கொடுத்து வருகின்றனர். இங்குள்ள நிலங்கள் தமக்குச் சொந்தமானவை என திணைக்கள அதிகாரிகள் கூறுகின்றனர் என ரவீந்திரன் தெரிவிக்கிறார்.

வனவளத் திணைக்கள அதிகாரிகளின் கெடுபிடிகளை விட யானைகளின் தொந்தரவையும் மாவடிஓடை கிராம மக்கள் தினந்தினம் எதிர்கொண்டு வருகின்றனர். யானைகளால் தினந்தினம் அச்சத்துடனேயே வாழ்க்கையைக் கழிப்பதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

சமீக காலங்களில் சில சக்தி வாய்ந்த தரப்புக்கள் எங்கள் கிராமத்தில் உள்ள இயற்கை வளங்களைக் குறிவைத்து வருகின்றன.

கனரக இயந்திரங்களின் துணையுடன் எங்கள் கிரமத்துக்கு சமீபமாக வகை-தொகையின்றி மணல் கொள்ளையர்கள் மணலை அள்ளிச் செல்கின்றனர். இவர்களால் எங்கள் நிலம் பறிபோகுமோ என்ற அச்சமும் உள்ளதாக அவர்கள் கவலை வெளியிடுகின்றனர்.

சமீபத்தில் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர்களின் தலையீட்டைத் தொடர்ந்து இங்கு மணல் அகழ்வை நிறுத்துமாறு மாவட்ட அரச அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர்.

மணல் வளம் நிறைந்த இந்தப் பகுதியில் தமது தேவைக்குக் கூட மணல் அள்ள இங்குள்ள மக்களுக்கு அனுமதி இல்லை. ஆனால் கடந்தல்காரர்கள் பெருமளவு மணலை அள்ளிச் செல்வதை யாரும் கண்டுகொள்ளவில்லை என அவர்கள் கூறுகின்றனர்.

மணல் சுரங்க நிறுவனங்கள் கிராமவாசிகளின் வறுமையை பயன்படுத்தி அவர்களின் உழைப்பைச் சுரண்டி கொள்ளை இலாபம் ஈட்டுகின்றன. இது எமது கிராமத்தில் சுற்றுச்சூழலை எவ்வாறு பாதிக்கும் என்பது குறித்து அவர்களுக்குக் கவலை இல்லை என இங்குள்ள தமிழ் உணர்வாளர்கள் அமைப்பின் தலைவரான கனபதிபில்லை மோகன் தெரிவித்தார்.

மணல் மாபியாக்களை நாங்கள் இதுவரை சினிமா படங்களில் மட்டுமே பார்த்தோம். ஆனால் இங்கே அவற்றை நம் கண்களுக்கு முன்னால் பார்க்கிறோம். இந்த மணல் மாபியாக்கள் பலர் ராஜபக்ஷ அரசாங்கத்துடன் இணைந்து செயற்படும் சில முக்கிய புள்ளிகளின் ஆசீர்வாதத்துடன் செயற்படுகின்றனர் என அவர் குற்றஞ்சாட்டுகிறார்.

மாகாணத்தில் மணல் அகழ்வு மோசமாக நடந்து வருவதை கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத் ஒப்புக்கொள்கிறார். மணல் அகழ்வுக்கான உரிமம் வழங்கும்போது புவியியல் துறை அனைத்து காரணிகளையும் கவனத்தில் கொள்கிறது. ஆனால் உரிமத்தைப் பெற்றுக்கொண்ட சிலர் அதனை மீறி அதிகளவு மணல் அகழ்வில் ஈடுபடுகின்றனர் எனவும் ஆளுநர் தெரிவித்தார். தமிழர்களின் விவசாய நிலங்களை வனவளத திணைக்களம் கையகப்படுத்தியதாக எழுந்த குற்றச்சாட்டுகள் குறித்து கேட்டதற்கு, சில சந்தர்ப்பங்களில் வனப்பகுதி எல்லைகளை புதிதாக வரையறை செய்யும்போது இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன எனவும் அவர் தெரிவித்தார்.

மக்கள் சிலர் வனப்பகுதிகளில் அத்துமீறி நிலங்களை ஆக்கிரமித்துள்ளமை குறித்த முறைப்பாடுகளும் உள்ளன எனவும் ஆளுநர் குறிப்பிட்டார்.

ஆனால் ஜனாதிபதி கோட்டாபய ஆட்சிக்கு வந்தபின் மட்டக்களப்பில் நிலம் தொடர்பான மோதல்கள் அதிகரித்துள்ளன என அங்குள்ள மக்கள் கூறுகின்றனர்.

மட்டக்களப்பு நகருக்கு தெற்கே சுமார் 70 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் தரவை ஆக்கிரமிக்கப்பட்டு அங்கு சிங்களக் குடியேற்றங்கள் இடம்பெற்று வருகின்றன.

மேலும் பதவியேற்ற ஆறு மாதங்களில் ஜனாதிபதி கோட்டாபய இலங்கையின் கிழக்கு மாகாணத்திலுள்ள தொல்பொருள் மரபுரிமைகளை முகாமைத்துவம் செய்வதற்கான ஜனாதிபதி செயலணியொன்றை அமைத்தார். இதுவும் கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. கிழக்கு மாகாணமானது, தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்களம் என பல சமூகங்கள் வாழும் ஒரு பகுதியாக காணப்படுகின்ற நிலையில், அந்த மாகாணத்தில் தமிழர்கள் மற்றும் சிங்களவர்களுக்கு சொந்தமான பல தொல்பொருள் சின்னங்கள் காணப்படுகின்றன.

எனினும், கிழக்கு மாகாணத்திலுள்ள தொல்பொருள் சின்னங்களை அடையாளம் கண்டு அவற்றை முகாமைத்துவம் செய்யும் வகையில் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி செயலணியின் அங்கத்தவர்கள் அனைவரும் சிங்கள பௌர்த்தர்களாக காணப்படுகின்றமை குறித்து கிழக்கு தமிழ் பேசும் மக்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

பாரம்பரிய தமிழர் நிலங்களை பௌத்தமயமாக்குவதே இந்தச் செயலணியின் சோக்கம் என அவர்கள் கூறுகின்றனர். மட்டக்களப்பில் திட்டமிட்டே இனப்பரம்பலை சீர்குலைக்கும் முயற்சிகள் இடம்பெறுவதாக அம்மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் குற்றஞ்சாட்டுகிறார்.

ராஜபக்ஷக்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்த பின்னர் கிழக்கில் தமிழர் பகுதிகளை சிங்களமயமாக்கும் செயற்பாடுகள் மிக விரைவாக இடம்பெற்று வருகின்றன எனவும் அவர் தெரிவிக்கிறார்.

**நன்றி - தி இந்து**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# புலமைச் சிகரம்

**ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி**

**45**

## 2019 - 05,38


38. நீரின் வெவ்வேறு கனவளவுகள் உள்ள மூன்று ஒத்த பாத்திரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.




மூன்று பாத்திரங்களிலும் உள்ள நீரின் கனவளவுகளைச் சமப்படுத்துவதற்குப் பின்பற்றத்தக்க விரைவானதும் இலகுவானதுமான நடைமுறை யாது?

1. பாத்திரம் A இலிருந்து பாத்திரம் C இற்கு நீரை இட்டு இரு பாத்திரங்களிலும் உள்ள நீர்க் கனவளவுகளைச் சமப்படுத்தல்
2. பாத்திரம் C இன் நீர்க் கனவளவுக்குச் சமமாக இருக்குமாறு A,B ஆகிய பாத்திரங்களிலிருந்து நீரை வெளியேற்றல்
3. மூன்று பாத்திரங்களிலும் உள்ள நீரை ஒரு பெரிய பாத்திரத்தில் இட்டு மறுபடியும் A,B,C ஆகிய மூன்று பாத்திரங்களிலும் சமமாக இடுதல்.

## 2020 - 38





38. A, B ஆகிய பாத்திரங்களில் உள்ள அரிசியில் சரிபாதி வீதம் வெளியே எடுத்து அவை அப்பாத்திரங்கள் இரண்டிலும் மாற்றி இடப்பட்டன. இப்போது பாத்திரம் A இல் உள்ள அரிசியின் அளவானது, பாத்திரம் B இல் உள்ள அரிசியின் அளவிலும்
   (1) மிகக் குறைவானது.
   (2) சமமானது.
   (3) மிகக் கூடுதலானது.

(01) மைதானமொன்றில் வெள்ளை, சிவப்பு, மஞ்சள் என்ற ஒழுங்கில் தொடர்ச்சியாக கொடிகள் நடப்பட்டிருந்தன எனின், அம்மைதானத்தில் 42வதாக நடப்பட்டிருந்த கொடியின் நிறம் யாது?
(1) சிவப்பு (2) வெள்ளை (3) மஞ்சள்

(02) ஒரு பண்ணையிலுள்ள ஓர் ஆட்டிற்கு 3 கால்கள் உள்ளன. அப் பண்ணையில் மொத்தமாக 11 ஆடுகள் உள்ளன எனின், அங்குள்ள ஆடுகளின் கால்களின் எண்ணிக்கை யாது?
(1) 30 (2) 33 (3) 43

(03) தரம் 05 இல் கற்கும் எனது தங்கையின் வயது 10 ஆகும். எனது வயது 12 ஆகும் நான் எனது 16 வயதில் க.பொ.த சாதாரண தரப் பரீட்சை எழுதும் போது எனது தங்கை எத்தனையாம் தரத்தில் கற்பாள்?
(1) தரம் 10 (2) தரம் 08 (3) தரம் 09

(04)



சதுர வடிவான காணி ஒன்றைச் சுற்றி 16 வேலித் தூண்கசள் நாட்டப்பட்டிருந்தன. இச்சதுர வடிவக் காணியை அம்புக்குறியினால் காட்டப்படும் . யாதாயினும் ஒரு திசை வழியே பார்க்கும் போது அப் பக்கத்தில் தெரியும் வேலிக் கம்பிகளின் எண்ணிக்கை எத்தனை?
(1) 4 (2) 5 (3) 6

(05) ஒரு மாஜரின் பக்கம்டையும் அதன் மூன்று மடங்கு விலையுள்ள பால்மா பக்கற்றையும் வாங்குவதற்கு மிதுசா ரூபா 600ஐச் செலவிட்டாள். பால்மா பக்கற்றின் விலை யாது?
(1) ரூ. 450.00 (2) ரூ. 200.00 (3) ரூ. 150.00

**இதற்கான விடைகள் நாளை வெளிவரும்**

**ஆசிரியர் அன்னமையா - 076 056 5786**

# கொழும்பு துறைமுக நகர சட்டமூலம் நீதித்துறைக்கு சவாலாக அமையாது

## அமைச்சர் கெஹலிய உறுதி



**கொழும்பு,ஏப்.18**

**கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவை அமைப்பதற்கான சட்டமூலம், நிறைவேற்று அதிகாரம் அல்லது நீதித்துறைக்கு சவாலாக அமையாது என அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல உறுதிபடத் தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

கொழும்பு துறைமுக நகரம் சீனாவுக்குச் சொந்தமானது என வெளிவரும் அறிக்கைகள் (செய்திகள்) உண்மைக்குப் புறம்பானவை.

கொழும்பு துறைமுக நகர் மூலம் வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஈர்ப்பதே அரசாங்கத்தின் நோக்கம். அந்த வகையில் கொழும்பு துறைமுக நகரத்துக்கு முதலீட்டாளர்களை அழைத்து வருவதற்கு அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

உள்நாட்டு சட்டங்கள் தொடர்பான பொதுவான நடைமுறையை அரசாங்கம் ஒருபோதும் தவிர்க்கவில்லை. எந்த நேரத்திலும் இந்த விவகாரம் குறித்து விவாதம் நடத்த அரசாங்கம் தயாராகவேயுள்ளது என்றும் அமைச்சர் குறிப்பிடடார். மேலும், நாட்டின் முன்னேற்றத்தை நாசமாக்கும் நோக்கில் முன்னெடுக்கப்பட்ட பல சதிமுயற்சிகள் தோற்கடிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (எ)

# நாட்டில் வருடாந்தம் மின்சார தேவை நூற்றுக்கு ஆறு வீதம் அதிகரிக்கிறது

## அமைச்சர் டலஸ் தகவல்



*கொழும்பு,ஏப்.18*

*நாட்டில் வருடாந்தம் மின்சார தேவை நூற்றுக்கு ஆறு வீதத்தால் அதிகரித்து வருகிறது. அதனால் மாற்று உற்பத்தி முறைகளைப் போன்று மின்சார விரயத்தைத் தடுக்கும் வழிவகைகளையும் கண்டறிய வேண்டும். மின்சார உற்பத்தியைப் பொறுத்தவரை தற்போது நாட்டுக்குத் தேவை நீண்ட கால நன்மை தரக்கூடிய சூழலுக்குப் பாதகமற்ற முறைகளாகும் என்று மின்சாரத் துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.*

*கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.*

*கேள்வி: மின்சாரத் துறை அமைச்சராக நீங்கள் பதவியேற்று பல மாதங்களாகியும் உங்களுடைய பொறுப்பு தொடர்பாகவும் அமைச்சின் விடயங்கள் குறித்தும் சமூகத்துக்குப் புரிந்துணர்வு ஏற்படவில்லை. அது பற்றி தெளிவுபடுத்த முடியுமா?*

*பதில்: நாம் எமக்கு வழங்கப்பட்ட பணியைச் சரிவர செய்வது குறித்தே கவனம் செலுத்துகின்றோம். நான் இந்த அமைச்சை பொறுப்பேற்கும் போது இந்த அமைச்சின் பணிகள் பற்றி அறிந்திருக்கவில்லை. அதனால், முதலில் எனக்கு வழங்கப்பட்ட விடயம் குறித்து கற்றுக்கொண்டேன். தற்போது எமது முயற்சி மின்சாரம் தொடர்பாக மக்களுக்குத் தேவையான சேவைகளைப் புரிவதாகும்.*

*கேள்வி: இப்பணியை தனியே நிறைவேற்ற முடியுமென நீங்கள் நம்புகிறீர்களா?*

*பதில்: நான் தனித்து இயங்க விரும்புவதில்லை. குழுவாக இணைந்து பணியாற்றவே விரும்புகின்றேன். எனக்கு நல்ல இராஜாங்க அமைச்சரொருவர் உள்ளார். அவர் துமிந்த திஸாநாயக்க. நல்ல அதிகாரிகள், பொறியியலாளர்கள் இருக்கிறார்கள். நான் இவர்களுடன் அணியாகப் பணிபுரிந்து பொதுமக்களுக்குத் தேவையான சேவையை வழங்க முடியுமென நம்புகின்றேன். ஜனாதிபதியிடம் நல்ல நோக்கும் திட்டங்களும் உள்ளன. அதற்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குவதே எமது அடிப்படை நோக்கமாகும்.*

*கேள்வி: நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் மின்சார தேவைக்கும் மற்றும் மின் உற்பத்திக்கும் இடையே சிக்கல்கள் உள்ளதல்லவா?*

*பதில்: நிச்சயமாக உள்ளது. இந்த விடயம் எதிர்காலத்தில் பெரும் சிக்கலை ஏற்படுத்தக்கூடும். 2013ஆம் ஆண்டு நுரைச்சோலை மின்நிலையத்தை அமைத்ததற்குப் பின்னர் பிரதான மின் உற்பத்தி நிலையமொன்று தேசிய மின்சார தொகுதியில் உள்ளடக்கப்படவில்லை. அதேபோன்று எம்மால் இன்னும் மூன்று நீர்மின் உற்பத்தி நிலையங்களையே அமைக்க முடியும். அவற்றாலும் இப்பிரச்னையை தீர்க்க முடியாது. ஏனென்றால் இந்நாட்டில் வருடாந்தம் மின்சார தேவை நூற்றுக்கு ஆறு வீதத்தால் அதிகரித்து வருகிறது. அதனால் மாற்று உற்பத்தி முறைகளை போன்று மின்சார விரயத்தைத் தடுக்கும் வழிவகைகளையும் கண்டறிய வேண்டும். மின்சாரத் துறை அமைச்சராக நான் கண்ட உண்மையொன்றை இங்கு குறிப்பிட வேண்டும். அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தன மற்றும் காமினி திஸாநாயக்க ஆகியோர் மகாவலி மின் உற்பத்தி நிலையத்தையும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தையும் அமைத்திருக்கா விட்டால் இன்று நாம் எமது மின்சார தேவையை நிறைவேற்ற முடியாது போய் இருக்கும்- என்றார். (எ)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை ஹொங்கொங் அல்ல சீனா ஒருபோதும் ஆள முடியாது

## விதுர விக்கிரமநாயக்க விளக்கம்

கொழும்பு,ஏப்.19

**நாட்டில் தனி நிர்வாகப் பிரிவை ஒருபோதும் அனுமதிக்க முடியாது எனவும், இலங்கையை ஹொங்கொங் போன்று சீனா ஆள முடியாது எனவும் தேசிய மரபுரிமைகள், கலை கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.**



கொழும்பு துறைமுக நகரம் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த ஊடகச்சந்திப்பில் விதுர மேலும் தெரிவித்தவை வருமாறு:

நாட்டிலுள்ள அனைத்து மக்களுக்கும் சட்டம் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும்.

அவ்வாறு இல்லாமல் ஹொங்கொங் போன்ற தனி நிர்வாகப் பிரிவை நாட்டில் ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

முதலீட்டாளர் யார் என்பது முக்கியமல்ல. நிலம் தொடர்பிலான சட்டம் அனைவருக்கும், எல்லா இடங்களுக்கும் பொருந்தும்.

அத்துடன் இந்த நடவடிக்கைகள் மக்களின் நலனுக்காக மேற்கொள்ளப்பட்டமையால் அது நாட்டின் முன்னேற்றத்துக்குப் பெரும் உத்வேகத்தை அளிக்கும் என்று நம்புகின்றேன் என அவர் குறிப்பிட்டார். (எ)

# நாட்டின் பல பகுதிகளில் கடும் மழைக்கு வாய்ப்பு

கொழும்பு,ஏப்.19

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும், காலி, மாத்தறை மற்றும் புத்தளம் மாவட்டங்களிலும் மழை அல்லது இடியுடன் கூடிய கடும் மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

மத்திய, ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களிலும், முல்லைத்தீவு மாவட்டத்திலும் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடும்.

மேல், மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் சில இடங்களிலும், காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் 50 மில்லி மீற்றருக்கும் அதிக கடும் மழை வீழ்ச்சியை எதிர்பார்க்கலாம்.

மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் சில இடங்களில் காலையில் மூடுபனி நிலைமைகளை எதிர்பார்க்கலாம்.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை குறைத்துக் கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொது மக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (எ)



# டிக்கோயாவில் வெள்ளம் 50 குடும்பங்கள் பாதிப்பு

ஹற்றன்,ஏப்.19

ஹற்றன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டிக்கோயா போடைஸ் பகுதியில் திடீரென ஏற்பட்ட வெள்ளத்தால் 50 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் பாதிக்கப்பட்டனர்.

இந்தப் பகுதியில் பெய்த கடும் மழை காரணமாக காசல்ரீ நீர்த்தேக்கத்துக்கு நீர் வழங்கும் தோட்டப்பகுதியில் அமைந்துள்ள சிறிய ஆறு பெருக்கெடுத்ததாலேயே இவ்வாறு வெள்ளம் ஏற்பட்டது.

இப்பகுதியில் மழைக்காலங்களில் ஆற்றுநீர் பெருக்கெடுப்பதால் பல இடர்களைச் சந்தித்து வருவதாக மக்கள் தெரிவித்தனர்.

அத்தோடு, ஹற்றன் டயகம பிரதான வீதியின் போடைஸ் பகுதியிலான வீதி நேற்று முன்தினம் மாலை நீரில் மூழ்கியது. இதனால் பல மணி நேரம் அவ்வீதியினூடான போக்குவரத்தும் பாதிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், பாதிக்கப்பட்ட பிரதேசத்துக்கு நேற்று முன்தினம் இரவு விஜயம் மேற்கொண்ட இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், நிலைமைகளை நேரடியாகப் பார்வையிட்டதுடன், மக்களின் குறைகளையும் கேட்டறிந்தார்.

இதனைத் தொடர்ந்து, இந்த ஆற்றை அகலப்படுத்தி இப்பிரதேசத்துக்கு வெள்ள அபாயம் ஏற்படாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் ஜீவன் தொண்டமான் உறுதியளித்தார். (எ)

# சர்ச்சைக்கு பதிலளிக்க வேண்டியது அரசாங்கத்தின் தலையாய கடப்பாடு

## அஸ்கிரிய பீடம் இடித்துரைப்பு



கொழும்பு,ஏப்.19

கொழும்பு துறைமுக நகர ஆணைக்குழு தேசிய சட்ட கட்டமைப்புக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். அதேவேளை, தற்போது ஏற்பட்டுள்ள சர்ச்சைக்குப் பதிலளிக்க வேண்டியது அரசாங்கத்தின் தலையாய கடப்பாடு. எனவே இந்த விவகாரம் குறித்து உடனடியாக மகா சங்கத்தினரை தெளிவுபடுத்த வேண்டும் என அஸ்கிரிய பீடத்தின் அநுநாயக்கர் மெதகம தம்மானந்த தேரர் வலியுறுத்தினார்.

கொழும்பு துறைமுக நகர ஆணைக்குழு சட்டமூலம் பெரும் சர்ச்சைக்குள்ளாகியுள்ள நிலையில் இவ்விடயம் தொடர்பில் அஸ்கிரிய பீடத்தின் நிலைப்பாட்டை வினவிய போதே மெதகம தம்மானந்த தேரர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

கொழும்பு துறைமுக நகர ஆணைக்குழு சட்டமூலம் தொடர்பான சர்ச்சை குறித்து அரசாங்கம் மகா சங்கத்தினருக்குத் தெளிவுபடுத்த வேண்டும்.

இந்த விவகாரத்தில் நாட்டின் இறையாண்மைக்கும், தேசிய சொத்துக்களுக்கும் பாதகத்தை ஏற்படுத்தும் வகையிலான செயல்பாடுகள் முன்னெடுக்கப்பட்டால் அதற்கு எதிராக நாம் நிச்சயம் குரல் கொடுப்போம்.

நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்காக முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களை நாம் எதிர்க்கவில்லை.

ஆனால், அந்த வேலைத்திட்டங்கள் எந்தவொரு வகையிலும் இலங்கையின் சட்ட கட்டமைப்புக்கு அப்பாற்பட்டதாக அமைந்துவிடக்கூடாது. எனவே, இது போன்ற விடயங்களில் வெளிப்படைத் தன்மை பேணப்பட வேண்டும்

கொழும்பு துறைமுக நகர வேலைத்திட்டம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவி வகித்த போது ஆரம்பிக்கப்பட்டது.

தமக்கான இலாபத்தை இலக்காகக் கொண்டு தான் இந்த வேலைத்திட்டத்தில் சீனா முதலீடுகளை மேற்கொண்டுள்ளது.

இதற்கமையவே இரு தரப்பு இணக்கப்பாடுகள் எட்டப்பட்டு இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தற்போது ஊடகங்களில் வெளிவரும் செய்திகளின் அடிப்படையில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சியின் போதும் சில இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ளன என அறியமுடிகிறது.

இவ்வாறான நிலையிலேயே தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் துறைமுக நகர ஆணைக்குழுவுக்கான சட்ட மூலம் தயாரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த சட்ட மூலத்தில் நாட்டுக்குப் பாதகத்தை ஏற்படுத்தக் கூடிய விடயங்கள் காணப்படுவதாகவும் விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

இவ்வாறு சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்ற போதிலும், அதன் உள்ளடங்கள் தொடர்பில் முறையாக மகா சங்கத்தினருக்கும், நாட்டு மக்களுக்கும் தெளிவுபடுத்தப்படவில்லை.

ஒருபுறம் இதற்கு எதிர்ப்புக்கள் வெளியிடப்படுகின்ற நிலையில் மறுபுறம் அரசாங்கத்தின் சார்பில் அவ்வாறு எதுவும் இல்லை என்று கூறப்படுகிறது.

இவ்வாறான நிலையில் குறித்த சட்ட மூலத்துக்கு எதிராக நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த சட்ட மூலம் தொடர்பில் இவ்வாறு பரவலாகப் விமர்சிக்கப்படுகின்றமையால் அரசாங்கத்தால் இதன் உண்மை நிலைமை என்ன என்பது தொடர்பில் மகா சங்கத்தினருக்கு தெளிவுபடுத்தப்பட வேண்டும்.

எனவே, ஆளுந்தரப்பினர் அல்லது இந்த விவகாரத்துடன் தொடர்புடைய அரச அதிகாரிகள் மகா சங்கத்தினரை சந்தித்து இதுதொடர்பில் விளக்கமளிக்க வேண்டும்என்று கோருகின்றோம்.

அவ்வாறில்லை எனில் முழுமையான விவரங்களை அறியாமல் எம்மால் எந்த நடவடிக்கைகளையும் முன்னெடுக்க முடியாது.

ஆனால் அரசாங்கம் எந்தவொரு வேலைத்திட்டத்தை முன்னெடுத்தாலும் அதனை நாட்டின் சட்ட கட்டமைப்புக்கு உட்பட்டதாக ஒழுக்கத்துடன் முன்னெடுக்க வேண்டும். மாறாக அவை நாட்டுக்கு பாதகத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருந்தால் அதற்கு எதிராக குரல் கொடுப்பதற்கு நாம் பின்வாங்கப் போவதில்லை- என்றார். (எ)

## காணாமல்போன 98 நீர் அளவு மானிகளுடன் கைதான

# தெரணியகலை பிரதேச சபை தவிசாளருக்கு விளக்கமறியல்

கொழும்பு,ஏப்.18

நீர்வழங்கல் அதிகார சபைக்குச் சொந்தமான நீர் அளவு மானிகளுடன் கைது செய்யப்பட்ட தெரணியகலை பிரதேச சபைத் தவிசாளர் நாளை திங்கள்கிழமை வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

தெரணியகலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கும்புருகம பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும், நீர்வழங்கல் வேலைத்திட்டத்துக்காக வைக்கப்பட்டிருந்த 477 நீர் அளவு மானிகள் காணாமல் போயுள்ளதாக கடந்த மார்ச் மாதம் 30 ஆம் திகதி இந்த வேலைத்திட்டத்துக்குப் பொறுப்பான பொறியியலாளரால் தெரணியகலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், களஞ்சியசாலையின் எழுதுவிளைஞர் ஒருவர் உட்பட மூன்று பேரை கைது செய்தனர்.

இந்நிலையில், காணாமல் போயிருந்த நீர் அளவு மானிகளில், 98 மானிகள் தெரணியகலை பிரதேச சபைத் தவிசாளரிடமிருந்து கைப்பற்றப்பட்டதுடன், பொலிஸார் அவ ரைக் கைது செய்தனர்.

இந்நிலையில், நேற்றுச் சனிக்கிழமை சந்தேக நபர் அவிசாவளை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தினர்.

இதன்போது, நீதிவான் அவரை நாளை திங்கள்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் எந்நேரமும் உயிரிழக்கக்கூடும்

## மருத்துவர் அதிர்ச்சி தகவல்

மொஸ்கோ, ஏப். 19

**சிறையில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் ரஷ்யாவின் எதிர்க்கட்சி தலைவர் அலெக்சி நவால்னி எந்த நேரத்திலும் உயிரிழக்கக் கூடும் என்று அவரது மருத்துவர் யர்சொல்ஸ்வா அஷீக்மின் தெரிவித்துள்ளார்.**

ரஷ்யாவின் எதிர்க்கட்சி தலைவராக செயல்பட்டு வருபவர் அலெக்சி நவால்னி(வயது-44). ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினின் ஆட்சிக்கு எதிராக பல ஆண்டுகளாகப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த அலெக்சி நவால்னி கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் நரம்பு மண்டலத்தை தாக்கும் கொடிய விஷத்தன்மை உடைய நோவிசோக் என்ற வேதிப் பொருள் தாக்குதலுக்கு உள்ளானார். இந்த தாக்குதல் ரஷ்ய அதிபரால் திட்டமிட்டு நடத்தப் பட்டதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

இந்த வேதிப்பொருள் தாக்குதலால் கோமா நிலைக்கு சென்ற நவால்னி ரஷ்யாவில் இருந்து



ஜேர்மனிக்கு கொண்டு செல்லப் பட்டு மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டது. சிகிச்சைக்கு பின் குணமடைந்த நவால்னி கடந்த ஜனவரி மாதம் 17ஆம் திகதி மீண்டும் ரஷ்யா வந்தார்.

மொஸ்கோ விமானநிலையம் வந்து இறங்கிய நவால்னியை ரஷ்ய பொலிஸாசார் கைது செய்தனர். 2014ஆம் ஆண்டு பதியப் பட்ட மோசடி வழக்கில் நவால்னி கைது செய்யப்பட்டதாக ரஷ்ய பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த வழக்கில் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட நவால்னிக்கு இரண்டரை ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டது. இதையடுத்து, அவர் மொஸ்கோவில்உள்ளசிறையில்அடைக்கப்பட்டார்.

இதற்கிடையில், சிறைச்சாலையில் அடைக்கப்பட்ட நவால்னி தனது எதிர்ப்பை வெளிப்படுத்தும் விதமாக கடந்த 3 வாரங்களாக சிறையிலேயே உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார். இதனால், அவரது உடல்நிலை மிகவும் மோசமடைந்து வருகிறது.

இந்நிலையில், உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டு வரும் அலெக்சி நவால்னி எந்த நேரத்திலும்உயிரிழக்ககூடும்என்று அவரது மருத்துவர் யர்சொல்ஸ்வா அஷீக்மின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட பேஸ்புக் பதிவில், சிறையில்அடைக்கப்பட்டுள்ளஅலெக்சி நவால்னியின் உடல்நிலை தொடர்பாக அவரது குடும்பத்தினர் கொடுத்த தரவுகளை பரிசோதனை செய்ததில் அவரின் உடலில் பொட்டாசியத்தின் அளவு தீவிரமாக உயர்த்தப் பட்டது. இது மாரடைப்பு மற்றும் சிறுநீரகத்தை பலவீனமடைய செய்யும் எங்கள்நோயாளி (அலெக்சி நாவல்னி) எந்த நேரத்திலும் உயிரிழக்கக்கூடும்' என தெரிவித்துள்ளார்.



# கடத்தப்பட்டு காணாமற்போன சிறுமி சுவிஸில் தாயாருடன் கண்டுபிடிப்பு!

பாரிஸ், ஏப். 19

பிரான்ஸில் கடத்தப்பட்டுக் காணாமற் போயிருந்த எட்டு வயதுச் சிறுமி மியா வும் அவரோடு தலைமறைவாகியிருந்த தாயாரும் சுவிஸில் கண்டுபிடிக் கப்பட்டுள்ளனர்.

சுவிற்சர்லாந்தில் பிரெஞ்சு மொழி பேசும் வாட் என்ற கன்ரன் பகுதியில் சென்.குறொக்ஸ் என்னும் இடத்தில் தாயையும் மகள் மியா வையும் சுவிஸ் பொலீஸாருடன் இணை ந்து பிரான்ஸின் பொலீஸ் அதிகாரிகள் கண்டு பிடித்துள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. கடத்தப் பட்டு ஐந்து தினங்களுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்ற மியா நல்ல ஆரோக்கியத்துடன் உள்ளார் என்று விசாரணையாளர்கள் கூறியுள்ளனர்.

சிறுமியை மீண்டும் அவரது பேர்த்தி யாரின் பொறுப்பில் ஒப்படைக்க நீதிமன் றம் உத்தரவிட்டுள்ளது. 28 வயதான தாயார் சுவிஸ் பொலீஸ் நிலையம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார். இந்தக் கடத்தல் சம்பவம் தொடர்பாக ஏற்கனவே ஐந்து பேர் பிரான்ஸில் கைது செய்யப் பட்டுள்ளனர்.

பாதுகாப்புக்கருதி நீதிமன்றம் ஒன்றினால் தாயாரிடம் இருந்து பிரிக்கப்பட்டிருந்த சிறுமி மியா, அவரது பேர்த்தியாரின் வீட்டில் வைத்து கடந்த 13 ஆம் திகதி கடத்தப்பட்டார். வன்முறைகளில் ஈடுபடுகின்ற இயக்கம் ஒன்றைச் சேர்ந்த சில ரது உதவியுடன் மியாவின் தாயாரே அவரைக் கடத்திச் சென்று தலை மறைவாகி இருந்தார்.



# ஒரு பக்கம் கொரோனா மறு பக்கம் வறுமை!

## தள்ளாடும் பிறேசில்

பிறேசிலியா, ஏப். 19

பிரேசில் நாட்டில் அச்சுறுத்தும் கொரோனா பரவலுக்கு நடுவே, உணவுக்காக பொது மக்கள் கை ஏந்தும் பரிதாப நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. வறுமைக்கு பஞ்சமில்லாத பிரேசில் நாட்டில், கொரோனா பரவலுக்கு முன்னர் இலவச உணவளிக்கும் தொண்டு நிறுவனங்களின் முன்னர் நாளுக்கு 300 பேர் காத்திருந்த நிலையில், தற்போது இந்த எண்ணிக்கை 1,000 கடந்துள்ளதாக அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

பொதுவாக அன்றாடம் கூலிக்கு வேலை செய்யும் அப்பாவி மக்களே இதுபோன்ற நிலைக்கு தற்போது தள்ளப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

பிரேசிலில் முதல் கொரோனா அலை ஏற்பட்ட போது, சுமார் 67 மில்லியன் மக்களுக்கு தலா 83 பவுண்டுகளை மாதம் தோறும் அரசு நிதியுதவியாக அளித்து வந்தது.

இதுபோன்ற ஏழைகளுக்கு நிதியுதவி அளிக்கும் திட்டங்களில் அதிக நாட்டமில்லாத ஜனாதிபதி கடைசி வரை எதிர்ப்பு தெரிவித்து வந்துள்ளார். பின்னர் கடும் நிர்பந்தம் காரணமாக அனுமதி அளித்ததுடன், அரசுக்கு அது நிதிச்சுமையை அளிப்பதாக உணர்ந்த அவர், குறிப்பிட்ட மாதங்களுக்கு பின்னர் உடனடியாக தடை விதிக்கவும் செய்தார்,

ஆனால் பொதுமக்களின் கோபத்திற்கு பயந்து மீண்டும் அறிமுகம் செய்தாலும், உதவித் தொகையில் நேர்பாதியாக குறைத்துள்ளார். மட்டுமின்றிம் மிக குறைவான எண்ணிக்கையிலான மக்களுக்கே தற்போது கொரோனா உதவித்தொகை அளிக்கப்பட்டு வருகிறது.

பிரேசில் தற்போது சுகாதார மற்றும் சமூக அவசரகால சிக்கலில் உள்ளது. இதுவரை கொரோனாவுக்கு 370,000 அப்பாவி மக்கள் பலியாகியுள்ள நிலையில்,

அதிகரிக்கும் கொரோனா பாதிப்பு எண்ணிக்கையால் மருத்துவமனைகள் ஸ்தம்பிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த வாரம் வெளியான ஒரு ஆய்வறிக்கையில், பிரேசில் நாட்டில் சுமார் 60 சதவீத மக்கள் ஒருவேளை உணவுக்கே தத்தளிப்பதாக தெரிய வந்துள்ளது.

# ஒரு வருடத்தின் பின் அவுஸ்திரேலியாவுடனான எல்லைகளை இன்று திறக்கின்றது நியூசிலாந்து!

வெலிங்ரன், ஏப். 19

நியூசிலந்து சுமார் ஒரு வருடத்துக்கு பின்னர் அவுஸ்திரேலியாவுடனான தனது எல்லைப் பகுதிகளை இன்று திங்கட்கிழமை முதல் மீண்டும் திறக்கிறது.

பயணிகள் தங்களைத் தனிமைப்படுத்திக்கொள்ளாமல் அந்த இரு நாடுகளுக்கும் இடையே இரு வழிப் பயணங்களை மேற்கொள்ளலாம் என நியூசிலாந்து அறிவித்துள்ளது.

அவுஸ்திரேலியாவிலிருந்து நியூசிலாந்து வரும் விமான பயணிகளுக்கு இன்று முதல் தனிமைப் படுத்தல்கட்டுப்பாடுகள்இருக்காது என்று நியூசிலாந்து பிரதமர் ஜசிந்தா ஆன்ட்ரேன் தெரிவித்துள்ளார்.

நியூசிலாந்தில் இருந்து அவுஸ்திரேலிய செல்லும் விமான பயணிகளுக்கு தனிமைப்படுத்தல் கட்டுப் பாடுகள் ஏற்கனவே விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளன.

இரு நாடுகளுக்கிடையே பயணம் செய்ய விரும்புவோர் குறைந்தது 3 நாளுக்கு முன்னர் இணையத்தில் பயண விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

தொடர்புத் தகவல்கள், சுகாதாரம் பற்றிய கேள்விகள், கடந்த 14 நாள்களில் நியூசிலந்தைவிட்டு வெளியே சென்றதுண்டா? என்பன போன்ற விவரங்கள் அதில் திரட்டப்படும். விமான நிலையத்தில் பயணிகள் அந்தப் படிவத் தைக் காட்ட வேண்டும் என்ற நிபந்தனைகளுடன் எல்லைகள் திறக்கப்படுகின்றன.

# பருவநிலை மாற்றத்துக்கு எதிராக போராட அமெரிக்கா - சீனா உறுதி!

வொஷிங்டன், ஏப். 19

உலக பருவநிலை மாற்றத்துக்கு எதிரான போராட்டத்தில் இணைந்து செயற்பட அமெரிக்காவும் சீனாவும் உறுதியேற்றுள்ளன. உலகின் மிக அதிகளவு கரியமில வாயுவை வெளியேற்றும் நாடுகளாக இவ்விரண்டு நாடுகளும் உள்ள நிலையில் இரு தரப்பும் பருவநிலை மாற்றத்தக்கு எதிராகப்போராட உறுதியேற்றுள்ளன.

உலகத் தலைவர்களுடன் இணைந்து அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் காலநிலை மாற்றம் குறித்த உச்சி மாநாட்டை நடத்தவுள்ள நிலையில் அதற்குச் சில நாட்களுக்கு முன்னதாக காலநிலை மாற்றத்துக்கு எதிரான ஒன்றிணைந்து போராட அமெரிக்காவும்சீனாவும்ஒப்புக்கொண்டுள்ளன.

அமெரிக்காவின் கால நிலை மாற்ற விவகாரங்களுக்கான தூதர் ஜோன் கெர்ரி ஷங்ஹாய் சென்றதைத் தொடர்ந்து இரு நாடுகளும் இணைந்து இது தொடர்பான கூட்டறிக்கையை வெளியிட்டன. பருவநிலை மாற்றம் தொடர்பான நெருக்கடி உடனே தீர்க்கப்பட வேண்டிய கடுமையான பிரச்னை என இந்தக் கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு இறுதியில் புதிய சுற்றுப் பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளது. அதற்கு முன்னர், பருவநிலை மாற்றத்தைச் சமாளிக்கப் புதிய கடப்பாடுகள் உறுதி செய்யப்பட வேண்டும் என்று அமெரிக்காவும் சீனாவும் வலியுறுத்தின. கரியமில வெளியேற்றத்தைக் குறைப்பதற்கான நடவடிக்கை கள்பற்றி இருதரப்பும் தொடர்ந்து கலந்துரையாடவுள்ளன. வளரும் நாடுகள், கரியமில வாயுவைக் குறைவாக வெளியிடுவதற்கு ஏற்ற வளங்களைப் பயன் படுத்த வேண்டும். அதற்குரிய நிதியை அதிகரிக்க, தேவையான நடவடிக்கைகளை எடுக்க அமெரிக்காவும் சீனாவும் இணக்கம் தெரிவித்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழர் விவசாயம் செய்த நிலங்களை பறிக்கிறது அரசு!

## வைகோ கொதிப்பு



சென்னை,ஏப்.19

**ஈழத் தமிழர்கள் எத்தனையோ நூற்றாண்டுகளாக, தலைமுறை தலைமுறையாக விவசாயம் செய்து வந்த நிலங்களை இலங்கை அரசாங்கம் பறிக்கிறது என ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்: உலக நாடுகளை ஏமாற்ற ஏற்கனவே பறித்த நிலங்களைத் திரும்ப வழங்கு வதாகப் போக்குக் காட்டிக் கொண்டே, மறுபுறம் புதிய நிலங்களைப் பறிக்கின்றது.

அண்மையில் மட்டக் களப்பு தமிழ் விவசாயிகளின் நிலங்களில் இலங்கை வனத் துறையினர் திடீரென எல் லைக் கற்களை நட்டு, இவை எல்லாம் வனப்பகுதிகள் என அறிவித்துள்ளனர். இந்த இடங் களை விட்டுத் தமிழர்கள் வெளியேற வேண்டும் என அச்சுறுத்துகின்றனர்.

எத்தனையோ நூற்றாண்டு களாக, தலைமுறைதலை முறையாக தமிழர்கள் விவ சாயம் செய்து வந்த நிலங் களைப் பறிக்கின்றனர்.

ராஜபக்ஷ குடும்பத்தின ருக்கு நெருக்கமான சிங்கள நிறுவனங்கள், பெரும் இயந் திரங்களைக் கொண்டு மணல் அகழ்கின்றன. இதனால், அரு கிலுள்ள தமிழர்களின் விளை நிலங்களில் பயிர்கள் அழிவ தைப் பற்றிக் கவலைப்படுவது இல்லை. தமிழர்களின் எதிர்ப் புக்களைக் கண்டு கொள்வது இல்லை.

தமிழர்களின் கால்நடைக ளுக்கான மேய்ச்சல் நிலங்க ளில் சிங்களக் குடும்பங்க ளைக் கொண்டு வந்து குடி அமர்த்தியிருக்கின்றது அரசாங்கம்.

இதை எதிர்த்து, மயிலத்த மடு பகுதி வாழ் தமிழ் விவ சாயிகள், பல மாதங்களாகப் போராட்டங்களை முன்னெ டுத்து வருகின்றனர்.

வனங்கள் பாதுகாப்பு என்ற போர்வையில் தமிழர் களின் நிலங்களைப் பறிப்பது மட்டுமல்லாமல் கடந்த ஆண்டு, தொல்லியல் துறை யின் சார்பில் பௌத்த சமயத் தடங்கள் குறித்த ஆய்வு என்ற பெயரில், தமிழர்களின் நிலங் களைப் பறிக்கின்ற முயற்சி களை மேற்கொண்டனர்.

இந்த விடயத்துக்கு கடுமையான கண்டனங்கள் எழுந்தன. இலங்கை நீதிமன் றங்களில் ஏராளமான வழக் குகள் பதிவாகியிருக்கின்றன. ஆனால், தமிழர்களுக்கு நீதி கிடைக்கவில்லை.

தொல்லியல் துறை ஆய்வு என்ற போர்வையில் கிழக்கு மாகாணத்தில் ஆய்வுகளை மேற்கொள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஒரு குழு அமைத்தார்.

அந்தக் குழுவில் சிங்களர் களும் பௌத்த பிக்குகளும் மட்டுமே இடம்பெற்றிருக் கின்றனர்.

அவர்கள் மட்டக்களப்பு குசலனமலை குமரன் கோவில், முன்பு பௌத்தர்களின் வழி பாட்டு இடம் என நிறுவு கின்ற முயற்சிகளை மேற் கொண்டு உள்ளனர்.

இதுபோன்ற முயற்சிக ளால் தமிழர்களின் நிலங் களை இலங்கை அரசு பறிப்பதை இந்திய அரசும் உலக நாடுகளும் தடுத்து நிறுத்த வேண்டும்.

ஏற்கனவே பறித்துக் கொண்ட நிலங்களிலிருந்து சிங்களக் குடியேற்றங்களை யும் சிங்களப் படை முகாம் களையும் அகற்ற வேண்டும் என வலியுறுத்த வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (எ)

# மியன்மாரில் கைதுசெய்யப்பட்ட இலங்கை மீனவர்கள் விடுவிப்பு

கொழும்பு,ஏப்.19

மியன்மார் கடற்படையின ரால் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கை மீனவர்கள் 12 பேரும் விடுவிக்கப்பட்டனர்.

இந்த மீனவர்கள் விடுவிக் கப்பட்டுள்ளதாக மியன்மாருக் கான இலங்கைத் தூதுவர் தெரி வித்தார்.

கடந்த ஜனவரியில் இரண்டு படகுகளில் 12 மீனவர்கள் சிலா பத்தின் மாரவில பகுதியில் இருந்தும் திருகோணமலை பகுதிகளிலிருந்தும் ஆழ்கடல் மீன்பிடி நடவடிக்கைக்காக கடலுக்குச் சென்றிருந்தனர்.

இந்நிலையில், ஏற்பட்ட சீரற்ற காலநிலையால் தவறு தலாக மியன்மார் கடற்பரப்பிற் குள் நுழைந்திருந்த நிலையில் அந்நாட்டுக் கடற்படையினர் குறித்த மீனவர்களைக் கைதுசெய்திருந்தனர்.

இந்நிலையில், மியன்மார் அதிகாரிகளுடனான பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து தடுத்துவைக்கப்பட்டிருந்த 12 மீனவர்களும் விடுவிக்கப்பட் டனர். (எ)

# துப்பாக்கிகளுடன் மூவர் சிக்கினர்!

கொழும்பு,ஏப்.19

நாட்டின் பல பிரதேசங்களி லும் பொலிஸ் விஷேட அதிர டிப்படையினரால் நேற்று முன் தினம் சனிக்கிழமை முன்னெ டுக்கப்பட்ட விஷேட சுற்றிவ ளைப்புக்களில் துப்பாக்கிகளு டன் 3 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர் என பொலிஸ் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரி வித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

களுத்துறை குற்ற விசார ணைப் பிரிவினரால் அளுத்கம பொலிஸ் பிரிவில், தர்கா நகர் - பொந்துபிட்டி பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட சுற்றி வளைப்பில் 38 ரக ரிவோல்வர் மற்றும் 6 துப்பாக்கி ரவைகளு டன் 37 வயது சந்தேகநபரொரு வர் கைது செய்யப்பட்டார்.

இந்த சந்தேகநபருக்கு எதி ராக களுத்துறை மற்றும் மத் துகம நீதிமன்றங்களில் மனித கொலையுடன் தொடர்புடைய வழக்கு விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன.

அத்தோடு குறித்த சந்தேக நபர் அந்த வழக்குகளில் பிணை யில் விடுவிக்கப்பட்டுள்ளவர் என்பதும் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

இதேவேளை, அநுராதபுரம் குற்ற விசாரணைப் பிரிவினரால் திறப்பனை பிரதேசத்தில் 40 வயது சந்தேகநபரொருவர் துப் பாக்கியுடன் கைது செய்யப் பட்டுள்ளார்.

இதேபோன்று, விஷேட அதிரடிப்படையினரால் கேகாலை இம்புல்கஸ்தெனிய பிரதேசத்தில் முன்னெடுக்கப் பட்ட சுற்றிவளைப்பில் 28 வயது சந்தேகநபரொருவர் துப்பாக்கி யுடன்கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப் பட்ட சந்தேகநபர்கள் தொடர் பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின் றன- என்றார். (எ)

# கொழும்பு துறைமுக நகர் சட்டமூலம் அரசமைப்புக்கு முரணானது இல்லை

## சட்டமா அதிபர் அறிவிப்பு



நாட்டில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள கொழும்பு

துறைமுக நகர் பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம் அர சமைப்புக்கு முரணானது இல்லை என சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா, ஜனாதிபதி செயலாளர் பி.பீ. ஜெயசுந்தர வுக்கு அறிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலாளர், சட்டமா அதிபருக்கு அனுப் பிய கடிதத்துக்கு பதிலளிக்கும் வகையில், சட்டமா அதிபர் அறிக்கையொன்றின் மூலம் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். (எ)

# தஹம் பாடசாலைகள் நேற்று திறப்பு சப்ரகமுவ பல்கலை. இன்று திறப்பு

கொழும்பு,ஏப்.19

கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் காரண மாக மூடப்பட்ட மேற்கு மாகா ணத்திலுள்ள தஹம் பாட சாலைகள் நேற்று ஞாயிற்றுக் கிழமை முதல் மீண்டும் திறக் கப்பட்டன.

இலங்கை முழுவதும் உள்ள அனைத்து தஹம் பாடசாலை களிலும், இனி ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் கல்வி நடவடிக்கைகள் இடம் பெறும் என புத்த விவகார ஆணையாளர் ஜெனரல் சுனந்த காரியபெரும தெரிவித்தார்.

இதற்கிடையில், சப்ரகமுவ பல்கலைக்கழக முதலாம் ஆண்டு மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை இன்று திங்கள்கிழமை ஆரம்பிப் பதற்குத் தீர்மானிக்கப்பட் டுள்ளது.

இதன்படி தொழில்நுட்ப பீடத்தின் மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகளையே முதலில் ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும், அனைத்து நிறுவனங்களின் கல்வி நட வடிக்கைகளும் சுகாதார வழி காட்டுதல்களின்படி மேற் கொள்ளப்பட வேண்டும் என அரசாங்கம் வலியுறுத்தி யுள்ளது. (எ)

# பிள்ளைகளால் தாக்கப்பட்டு பெற்றோர் உயிரிழக்கும் சம்பவங்கள் அதிகரிப்பு

## பொலிஸ் பேச்சாளர் கவலை

கொழும்பு,ஏப்.19

கிளிநொச்சியில் மகனின் தாக்குதலுக்குள்ளான தந்தை யொருவர் உயிரிழந்தார். கடந்த 11 ஆம் திகதி மகனால் தாக்குத லுக்குள்ளாகி வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டிருந்த குறித்த தந்தையே நேற்று முன் தினம் சனிக்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இவ்வாறு கடந்த சில மாதங் களாக பிள்ளைகளால் தாக்கப் பட்டு பெற்றோர் காயமடைதல் அல்லது உயிரிழத்தல் போன்ற சம்பவங்கள் அதிகளவில் பதி வாகியுள்ளன. இது மிகவும் கவலைக்குரிய நிலைமையாகும் என பொலிஸ் பேச்சாளர், பிர திப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

கடந்த 11 ஆம் திகதி கிளி நொச்சி - கனகபுரம் பிரதேசத் தில் 20 வயது மகனால் 53 வய துடைய தந்தை தாக்கப்பட் டார்.

இவ்வாறு மகனால் தாக்கு தலுக்குள்ளாகி வைத்தியசா லையில் அனுமதிக்கப்பட்டி ருந்த தந்தை சனிக்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரி ழந்தார்.

சந்தேகநபர் கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப் பட்டுள்ளார். சம்பவம் தொடர் பில் கிளிநொச்சி பொலிஸ ாரால் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வரு கின்றன.

இவ்வாறான சம்பவங்களைத் தவிர்ப்பதற்கான விசாரணைகள் பொலிஸாரால் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின் றன. எனினும் இதற்கு சகல தரப்பினரதும் ஒத்துழைப்பு அவ சியமாகும்- என்றார். (எ)

# இரண்டாம் கட்ட தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை குறித்து இன்று தீர்மானம்

கொழும்பு,ஏப்.19

இலங்கையில் இரண்டாம் கட்டமாக ஒக்ஸ்போர்ட் அஸ்ட் ராசெனேகா கொரோனா தடுப் பூசி செலுத்துவது தொடர்பான இறுதித் தீர்மானம் இன்று திங்கள்கிழமை மேற்கொள்ளப் படும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விஷேட வைத்தியர் அசேல குணவர்த் தன தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு: தொற்று நோய்த் தடுப்புப் பிரிவில், இன்று பிற் பகல் 2 மணியளவில் நிபுணர் குழு கூடவுள்ளது.

இதன்போது அஸ்ட்ராசெ னேகா கொரோனா தடுப்பூ சியை 10 அல்லது 12 வாரங்களிலா செலுத்துவது என்பது தொடர் பில் இறுதித் தீர்மானம் மேற் கொள்ளப்படும்- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பில் பிரத்தியேக இராணுவமா? ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை

## அமைச்சர் அமரவீர உறுதி

கொழும்பு,ஏப்.19

**எதிர்க்கட்சி குறிப்பிடுவதைப் போன்று கொழும்பு துறைமுக நகரத்துக்குள் பிரத்தியேக சட்டம், பிரத்தியேக இராணுவம் என்றவாறான செயல்பாடுகளை முன்னெடுக்க நாம் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை. எனினும் அவ்வாறானதொரு நிலைமை உருவாகும் என்று நாம் எதிர்பார்க்கவில்லை என அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.**



கொழும்பு துறைமுக நகர ஆணைக்குழு சட்டமூல சர்ச்சை தொடர்பில் கருத்து வெளியிடும் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

தமிழ் - சிங்கள புத்தாண்டில் கடந்த காலத்தில் அரசாங்கத்தில் காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்து புதிய பாதையில் பயணிக்க எதிர்பார்த்துள்ளோம்.

இந்தப் பயணத்தில் நாட்டை அபிவிருத்தியடைச் செய்வதே எமது பிரதான இலக்காகும். இலங்கையை அபிவிருத்தியடைந்த நாடாக உருவாக்குவதற்கான பொறுப்பு ஜனாதிபதி உள்ளிட்ட எம் அனைவரினதுமாகும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் வழிகாட்டலில் நாட்டின் மேம்பாட்டிற்கான வேலைத்திட்டத்துக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவது எமது இலக்காகும்.

கொரோனா தொற்று அச்சம் காரணமாக ஏற்பட்ட நெருக்கடிகள் மற்றும் மேற்குலக நாடுகளால் ஏற்பட்ட நெருக்கடிகள் உள்ளிட்டவை தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும் இவை அனைத்தையும் சிறந்த முறையில் முகாமைத்துவம் செய்து நாட்டுக்கு உரித்தான விடயங்களைச் செயல்டுத்துவதே எமது எதிர்பார்ப்பாகவுள்ளது.

எமது பதவிகளைத் தக்க வைத்துக்கொள்வதும், ஆட்சி அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்வதும் தற்போது எமது எதிர்பார்ப்பல்ல. எனவே, நாம் அனைவரும் எம்மிலுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்து நாட்டின் முன்னேற்றத்திக்காக அர்ப்பணிப்புடன் செயல்படுவோம்.

எதிர்க்கட்சி கூறுவதைப் போன்று துறைமுக நகரத்துக்குள் பிரத்தியேக சட்டம், இராணுவம் என்று செயல்பட இடமளிக்க நாம் தயாராக இல்லை.

அவ்வாறான நிலைமை உருவாகும் என்று நாம் எதிர்பார்க்கவில்லை. இந்த சிக்கல் தொடர்பில் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண முடியும் என்பதே எமது நிலைப்பாடாகும். எவ்வாறிருப்பினும் எத்தகைய தீர்மானமாயினும் கட்சி ரீதியி லேயே அதனை நாம் முன்னெடுப்போம். அந்தத் தீர்மானம் நாட்டுக்குச் சாதகமான தீர்மான மாக அமையுமே தவிர ஒரு போதும் நாட்டுக்குப் பாதிப்பை ஏற்படுத்துவதாக இருக்காது- என்றார். (எ)

## 5000 ரூபா கொடுப்பனவு இன்றும் வழங்கப்படும்

கொழும்பு,ஏப்.19

5000 ரூபாய் கொடுப்பனவு இதுவரை வழங்கப்படாதவர்களுக்கு இன்று திங்கள்கிழமை முதல் வழங்கப்படும் என சமூர்த்திப் பணிப்பாளர் நாயகம் பந்துல திலகசிறி தெரிவித்தார்.

எதிர்வரும் வாரத்தின் முதல் சில நாள்களில் 5 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவை வழங்கி இந்தத் திட்டத்தை நிறைவு செய்ய எதிர்பார்த்துள்ளதாக அவர் குறிப்பிட்டார். இதற்குத் தேவையான நிதியை சமூர்த்தி வங்கிகளுக்கு அனுப்பியுள்ளதாகவும், இல்லையென்றால் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களை தங்களிடம் சமர்ப்பித்து தேவையான நிதிகளை அந்தந்த பகுதிகளுக்குப் பெற்றுக் கொள்ளுமாறு கோரியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (எ)

## போதையில் சாரத்தியம் 1,834 பேர் கைதாகினர்

கொழும்பு,ஏப்.19

மதுபோதையில் வாகனம் செலுத்தியமைக்காக ஏப்ரல் 13 முதல் நேற்றுக் காலை 6 மணி வரையான காலப்பகுதியில் பொலிஸார் முன்னெடுத்த சிறப்பு நடவடிக்கையில் 1,834 பேர் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை, மதுபோதையில் வாகனம் செலுத்துபவர்களை கைதுசெய்வதற்கான சிறப்பு நடவடிக்கை நேற்று நண்பகல் முதல் இன்று காலை 6 மணிவரை செயல்படுத்தப்படும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் தலைமையகத்தின் ஆலோசனையின் பேரில் மேற்கொள்ளப்படும் இந்த நடவடிக்கை, நெடுஞ்சாலைகளின் நுழைவாயில்கள் மற்றும் வெளியேறும் இடங்களில் செயல்படுத்தப்படும்.

இதேவேளை, பண்டிகைக் காலத்தில் மதுபோதையில் வாகனங்களைச் செலுத்தும் சாரதிகளை சட்டத்தின் பிடியில் சிக்க வைக்கும் விஷேட தேடுதல் நடவடிக்கை இன்று 20 ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படும். என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

மதுபோதையில் வாகனம் செலுத்துவோருக்கு பொலிஸாரால் பிணை வழங்கப்படமாட்டாது. இவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படுவார்கள் என்றும் அவர் கூறினார். (எ)

## 5 நாள்களில் 399 விபத்துக்கள் 52 பேர் பலி! 669 பேர் காயம்!

கொழும்பு,ஏப்.19

நாட்டில் கடந்த 5 நாள்களில் மொத்தம் 399 வீதி விபத்துக்கள் பதிவாகின என பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு பதிவான வீதி விபத்துக்களில் சிக்குண்டு 52 பேர் உயிரிழந்ததுடன், 669 பேர் காயமடைந்தனர் என பிரதிப் பொலிஸ்மா அதிபரும், பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதேவேளை, இந்த விபத்துக்களில் 2,242 வாகனங்கள் சேதங்களுக்குள்ளாகின. அவற்றுள் 1,429 மோட்டார் சைக்கிள்களும், 552 ஓட்டோக்களும் அடங்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(எ)

# துறைமுக நகர ஆணைக்குழுவால் இறையாண்மைக்கு பாதிப்பில்லை

## நிமால் லான்ஸா சொல்கிறார்

கொழும்பு,ஏப்.19

கொழும்பு துறைமுகநகரபொருளாதார ஆணைக்குழுவால் நாட்டின் இறையாண்மைக்கு எவ்வித பாதிப்பும்ஏற்படாது எனவும், தேசிய பொருளாதாரத்தை துரிதமாக அபிவிருத்தி செய்ய வேண் டிய தேவை காணப்படுகிறது எனவும் கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதி கள் இராஜாங்க அமைச்சர் நிமல் லன்சா தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப் பிட்டார். அவர்அங்குமேலும்குறிப்பிடுகையில்:

கொழும்பு துறைமுகநகரபொருளாதார ஆணைக்குழு சட்டமூல விவகாரம் தற் போதைய பிரதான பேசுபொருளாகக் காணப்படுகின்றது.

தவறான விடயங்களை முன்னிலைப்படுத்தி அதனூடாக அரசியல் இலாபம் தேடிக்கொள்ள ஆளும் தரப்பின் ஒரு சில உறுப்பினர்களும், எதிர்க்கட்சியினரும் முயற்சிக்கின்றனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தின் மீது நாட்டு மக்கள் பாரிய எதிர்பார்ப்புக்களை வைத்துள்ளனர்.

30 வருட கால யுத்தத்தை நிறைவுக்கு கொண்டுவந்து தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தியதன் கௌரவத்தை நாட்டு மக்கள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு இன்றும் வழங்குகின்றனர்.

கொழும்பு துறைமுக நகரம் சீன காலனித்துவ ஆட்சிக்குள் கொண்டுவரப்படுவதாக குறிப்பிடப்படும் கருத்து முற்றிலும் தவறானதாகும்.

ராஜபக்ஷக்கள் நாட்டை ஒரு போதும்காட்டிக்கொடுக்க வில்லை.



சர்வதேசத்திடமிருந்து நாட்டை பல முறை பாதுகாத்தவர்கள். நெருக்கடியானசூழ்நிலையிலும்நாட்டின்சுயாதீனத் தன்மை விட்டுக்கொடுக்கப் படவில்லை. துறைமுகநகரம்தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சைக்கு அரசாங்கம் விரைவில் உரிய தீர்வு வழங்கும். இவ்விடயம் தொடர்பில் அனைத்துத் தரப்பினருடனும் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே, போலிச்செய்திகள் தொடர்பில் நாட்டு மக்கள் அவதானமாகச் செயல்பட வேண்டும்- என்றார். (எ)

# 80 வீதமான பஸ் சாரதிகள் போதைப்பொருள் பாவனை

## அமுனுகம அதிர்ச்சித் தகவல்

கொழும்பு,ஏப்.19

கொழும்பில் வாகன நெரிசல் அதிகமாகக் காணப்படும் வீதிகளில் போக்குவரத்து நடவடிக்கையில் ஈடுபடும் தனியார் பஸ் சாரதிகளில் 80 சதவீதமானோர் போதைப்பொருள் பாவனையுடன் பணிபுரிகின்றனர். இது மிகவும் பாரதூரமான செயல்பாடாகும். போதைப்பொருள் பாவித்து பஸ் செலுத்தும் சாரதிகளை கண்காணிக்கும் நடவடிக்கை நாடு தழுவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுள்ளது என போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்

கண்டியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

வீதி விபத்துச் சம்பவங்கள் இடம்பெறுவதற்கு போதைப்பொருள் பாவனை பிரதான காரணியாகக் காணப்படுகின்றது.

பண்டிகை காலத்தில் அதிகளவான வீதி விபத்துக்களும், வீதி விபத்துக்களால் மரணங்களும் பதிவாகியுள்ளன. இதற்கு போதைப்பொருள் பாவனை பிரதான காரணம் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

கொழும்பில் வாகன நெரிசல் அதிகமாகவுள்ள பகுதிகளில் போக்குவரத்து நடவடிக்கைகளில் ஈடுபடும் தனியார் பஸ் சாரதிகளில் 80 சதவீதமானோர் பல்வேறு வகையான போதைப்பொருள்களை பயன்படுத்துகின்றனர்.

இவர்கள் போதைப்பொருள்களைப் பயன்படுத்திய வண்ணம் போக்குவரத்து நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். இது மிகவும் பாரதூரமான செயல்பாடாகும்.

போதைப்பொருள்களை பாவித்துக் போக்குவரத்து நடவடிக்கைகளில் ஈடுபடும் சாரதிகள் தொடர்பில் கண்காணிக்க உரிய நடவடிக்கை நாடு தழுவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுள்ளது. சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கு வதற்கு முன்னர் மருந்துவ பரிசோதனை அறிக்கையைப் பெற்றுக் கொள்வது அவசியமாகும்.

குறித்த நபர் ஒரு மாத காலத்துக்கு முன்னர் பாவித்த போதைப்பொருள் தொடர்பில் பரிசோதனை செய்யும் புதிய வழிமுறை தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் அமைச்சரவையின் கவனத்துக்கு கொண்டு செல்ல போக்குவரத்து அமைச்சரால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பண்டிகையை முன்னிட்டு சொந்த இடங்களுக்குச் சென்றவர்கள் மீண்டும் தங்களின் சேவை பிரதேசங்களுக்கு வருகைதர விஷேட போக்குவரத்து சேவை தற்போது செயல்படுத்தப்பட்டுள்ளன.



மாகாணங்களுக்கிடையிலான போக்குவரத்து சேவைக்காக 200 அரச பஸ்கள் மேலதிகமாக சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளன- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# தவான் அதிரடி ஆட்டம்: பஞ்சாப்பை வென்றது டில்லி!



மும்பை, ஏப். 19

தவானின் அதிரடி அரைச்சதம் கைகொடுக்க பஞ்சாப் அணியை 4 விக்கெட்களால் வெற்றி கொண்டது டில்லி கப்பிட்டல்ஸ் அணி.

ஐ.பி.எல். இருபது - 20 தொடரின் 11ஆவது போட்டி நேற்றிரவு மும்பையில் நடந்தது. இதில், கே.எல். ராகுல் தலைமையிலான பஞ்சாப் கிங்ஸ், ரிஷப் பந்த் தலைமையிலான டில்லி கப்பிட்டல்ஸ் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற டில்லி கப்பிட்டல்ஸ் முதலில் துடுப்பெடுத்தாடும் வாய்ப்பை பஞ்சாப்பிடம் கொடுத்தது.

கே.எல். ராகுல் - மயங்க் அகர்வால் இணை தொடக்கம் கொடுத்து. அரைச்சதம் கடந்து அசத்திய, இருவரும் அபாரமான இணைப்பாட்டத்தை ஏற்படுத்தினர். 7 பௌண்ட்ரிகள், 4 சிக்ஸர்களை விளாசி 36 பந்துகளில் 69 ஓட்டங்களை குவித்த மயங்க் அகர்வால் முதல் விக்கெட்டாக வீழ்ந்தார்.

அடுத்து, அதிரடி வீரர் கெயில் களம் புகுந்த நிலையில், 7 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 61 ஓட்டங்களைப் பெற்ற ராகுல் ஆட்டமிழந்தார்.

இதன் பின்னர் வந்த வீரர்கள் பெரிதாக சோபிக்கவில்லை. கெயில் 11, நிக்கொலஸ் பூரண் 9 என்று ஆட்டமிழந்தனர்.

20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 195 ஓட்டங்களைப் பெற்றது.

ஹூடா 22 ஓட்டங்களையும், ஷாருக் கான் 15 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றனர்.

டில்லியின் பந்துவீச்சில், வோக்ஸ், மெரிவல, ரபாடா, ஆவேஸ் கான் ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய டில்லிக்கு பிரத்திவி ஷா - தவான் இணை, ஓரளவுக்கு சிறப்பான தொடக்கத்தை வழங்கியது. 3 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 17 பந்துகளில் 32 ஓட்டங்களை எடுத்த ஷா ஆர்ஷ்தீப் சிங்கின் பந்தில் ஆட்டமிழந்தார்.

மறுமுனையில் தவான் நிலைத்து ஆட, ஸ்ரீவன் ஸ்மித் வெறும் 9 ஓட்டங்களுடன் வெளியேறினார். இதனிடையே அரைச்சதம் கடந்த தவான், ரிஷப் பந்துடன் இணைந்தார். அவர் பந்துகளை பொறுமையாகக் கையாள 13 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 49 பந்துகளில் 92 ஓட்டங்களைக் குவித்த தவான் றிச்சர்ட்சனின் பந்தில் 'போல்ட்' ஆனார்.

ரிஷப் பந்த் 18ஆவது ஓவரில் விக்கெட்டைப் பறி கொடுத்தார். அவர் 16 பந்துகளில் 15 ஓட்டங்களை அப்போது எடுத்திருந்தார்.

இதைத் தொடர்ந்து, ஸ்ரொய்னிஸுடன் இணைந்தார் யாதவ். ஸ்ரொய்னிஸ் இறுதிநேர அதிரடி காட்டி, 18ஆவது ஓவரின் 2ஆவது பந்தை பௌண்ட்ரிக்கு விரட்ட 198 ஓட்டங்களை குவித்து வெற்றி பெற்றது டில்லி அணி.

பஞ்சாப்பின் பந்துவீச்சில் றிச்சர்ட்சன் 2 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

ஆட்டநாயகனாக தவான் தெரிவானார். (ஐ)

# மக்ஸ்வெல் - வில்லியர்ஸ் அதிரடி! பெங்களூர் 'ஹட்ரிக்' வெற்றி

சென்னை, ஏப். 19

மக்ஸ்வெல் - டி வில்லியர்ஸின் அதிரடி ஆட்டத்தால் கொல்கத்தாவை 38 ஓட்டங்களால் வென்று 'ஹட்ரிக்' வெற்றியைப் பதிவு செய்தது பெங்களூர் அணி.

ஐ.பி.எல். இருபது - 20 தொடரில் நேற்று பகல் நடந்த 10ஆவது போட்டியில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் - கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணிகள் மோதின.

சென்னையில் நடந்த இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற பெங்களூர் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

அணித் தலைவர் விராட் கோலி, தேவ்தத் படிக்கல் இணை தொடக்கம் கொடுத்தனர். இரண்டாவது ஓவரிலேயே இந்த இணையை பிரித்து அனுப்பினார் வருண். கோலி 5 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 'எக்ஸ்ட்ரா கவர்' திசையில் அடித்தார். பறந்து வந்த பந்தை அபாரமான பிடியெடுத்த திரிபாதி கோலியை ஆட்டமிழக்கச் செய்தார்.

அடுத்து வந்த ராஜத் பரிதார் இரு பந்துகளே தாக்குப்பிடித்தார். அவரை வருண், போல்ட் அவுட் ஆக்கினார். எனினும் அடுத்து வந்த கிளென் மக்ஸ்வெல், விக்கெட் வீழ்ச்சியை தடுக்கும் விதமாக பொறுமை காத்து ஆடினார்.

நிலைத்த இணை, சிறப்பான இணைப்பாட்டத்தை ஏற்படுத்தியது. 3ஆவது விக்கெட்டுக்காக 86 ஓட்டங்களை எடுத்தபோது, படிக்கல் 25 ஓட்டங்களுடன் பிரசித் கிருஷ்ணாவின் பந்தில் ஆட்டமிழந்தார்.

மறுமுனையில் நின்று அதிரடி காட்டிய மக்ஸ்வெல்லுடன் இணைந்தார் அதிரடி வீரரான ஏபி டி வில்லியர்ஸ். இருவரும் சிறப்பான இணைப்பாட்டத்தை மீண்டும் ஏற்படுத்தினர்.

இருவரும் மாறிமாறி அடித்த சிக்ஸர், பௌண்ட்ரிகளால் பெங்களூரின் ஓட்ட எண்ணிக்கை வேகமாக உயர்ந்தது. இந்த நிலையில், 49 பந்துகளில் 9 பௌண்ட்ரிகள், 3 சிக்சர்களை விளாசி 78 ஓட்டங்களை குவித்த மக்ஸ்வெல் கம்மின்ஸின் பந்தில் வெளியேறினார்.

ஆனால், ஏபி டி வில்லியர்ஸ் மறுமுனையில் தனது அதிரடியைத் தொடர் பெங்களூர் அணி 200 ஓட்டங்களைத் தொட்டது.

20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்களை இழந்த அந்த அணி 204 ஓட்டங்களை குவித்தது.

வில்லியர்ஸ் 9 பௌண்ட்ரிகள், 3 சிக்ஸர்களை பறக்கவிட்டு, 34 பந்துகளில் 76 ஓட்டங்களுடனும், ஜமைசன் 4 பந்துகளில் 11 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

கொல்கத்தாவின் பந்துவீச்சில் வருண் சக்கரவர்த்தி 2 விக்கெட்களையும், பட் கம்மின்ஸ், பிரசித் கிருஷ்ணா ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

205 ஓட்டங்கள் என்ற கடினமான இலக்கு நோக்கி துடுப்பெடுத்தாடியது கொல்கத்தா அணி. நிதிஷ் ராணா - சப்மன் கில் இணை தொடக்கம் கொடுத்தது. சற்றுப் பெரிய இலக்கு என்பதால் ஆரம்பம் முதலே அடித்தாட ஆரம்பித்தனர்.

சப்மன் கில் 2 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களை பறக்கவிட்டு 9ஆவது பந்தில் 21 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

மறுமுனையில் ராணா சற்றுப் பொறுமை காத்தார். திரிபாதி வந்த பின்னர் ராணாவுக்கு பந்தை எதிர்கொள்ளும் சந்தர்ப்பம் பெரிதாகக் கிடைக்கவில்லை. இந்நிலையில் பெறுமையாக 20 பந்துகளை எதிர்கொண்டு 5 பௌண்ட்ரிகளை விரட்டிய திரிபாதி 25 ஓட்டங்களுடன் வெளியேறினார். அவரைத் தொடர்ந்து 2 பௌண்ட்ரிகள், ஒரு பௌண்ட்ரியுடன் 18 ஓட்டங்களை எடுத்த ராணாவும் ஆட்டமிழந்தார்.

வேகமாக ஓட்டங்களைக் குவிக்க முனைந்ததால், கொல்கத்தா அணி விக்கெட்களை சடுதியாக இழந்து தவிக்க ஆரம்பித்தது. இதனால், அணித் தலைவர் இயன் மோர்கன் பொறுமை காத்தார். பந்துகளை அவர் பார்த்து பார்த்து அடிக்க, மறுமைனயில் தினேஷ் கார்த்திக் 2 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

எனினும் அடுத்து வந்த சகீப் அல் ஹசனும் பொறுமை காத்து ஆடினார். இதனால், விக்கெட் வீழ்ச்சி சற்றுத் தவிர்க்கப்பட்டாலும், அணியின் ஓட்ட எண்ணிக்கை மிக மந்தமாகவே இருந்தது. இந்நிலையில் 29 ஓட்டங்களுடன் இயன் மோர்கன் ஆட்டமிழக்க, களம் புகுந்தார் அந்ரே ரஷல்.

4 ஓவர்களில் 79 ஓட்டங்கள் என்ற நிலையில் இருவரும் சற்று நிதானித்து ஆடினர். 17ஆவது ஓவரின் முதல் 4 பந்துகளில் ஒரு சிக்ஸர், 3 பௌண்ட்ரிகள் என



விரட்டி 18 ஓட்டங்களைக் குவித்து பெங்களூருக்கு நெருக்கடி கொடுத்தார் ரஷல்.

18 ஓவரில் ஒரு சிக்ஸரை விளாச, அந்த ஓவரில் சகீப் அல்ஹசன் 26 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த கம்மின்ஸூம் 6 ஓட்டங்களுடனே வெளியேற, கொல்கத்தா அணி தவித்தது. ரஷல் அதிரடி காட்டுவார் என எதிர்பார்த்த நிலையில், 19ஆவது ஓவரில் ஒரேயோர் ஓட்டத்தையே எடுத்தார். இதனால், பெங்களூரின் வெற்றி உறுதியானது.

20ஆவது ஓவரின் முதல் பந்தில் ரஷல் ஆட்டமிழந்தார். 9ஆவது விக்கெட்டுக்காக இணைந்த ஹர்பஜன் சிங், வருண் சக்கரவர்த்தி ஆகியோர் தலா 2 ஓட்டங்களை எடுத்திருந்த நிலையில் ஆட்டம் முடிவுக்கு வந்தது.

கொல்கத்தா அணி 8 விக்கெட்கள் இழப்புக்கு 166 ஓட்டங்களையே எடுத்திருந்தது. இதனால், 38 ஓட்டங்களால் அந்த அணி தோல்வியை தழுவியது.

பெங்களூரின் பந்துவீச்சில், ஜமைசன் 3 விக்கெட்கள், சாகல், பட்டேல் தலா 2 விக்கெட்களை கைப்பற்றினர். ஆட்டநாயகனாக ஏபி டி வில்லியர்ஸ் தெரிவானார். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 19.04.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிடெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து வழங்குபவர் : திருமதி கோகிலா மகேந்திரன்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க
1.00 மணி : அறிந்தும் அறியாமலும் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ் திரைப்படக் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்- சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : சினிமா சினிமா-வாராந்த சினிமா தகவல்கள்

**இரவு**
7.00 மணி : சொற்சமர் -பாடசாலை மாணவர்களுக்கான விவாத நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சாட்சியம்
9.30 மணி : நலந்தானா-மருத்துவர் மதுராங்கி கிருஸ்ணகுமார்



10.00 மணி : யாவரும் கேளீர்

---

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : திரைப்படம்

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : திரைப்படம்
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

---

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : ஒஸ்கார் ராகங்கள்
10.00 மணி : டான் மிக்ஸ் மசாலா (நேரலை)

**பகல்**
12.00 மணி : நட்சத்திரம்
1.00 மணி : மஞ்சள் வெயில் மாலையிலே ( நேரலை)
3.00 மணி : இசை மேடை
4.00 மணி : வீக் என்ட் எக்ஸ்ப்றஸ் (நேரலை)
5.00 மணி : என்றென்றும் இசை

**இரவு**
7.00 மணி : பாட்டு தலைவர்கள்
8.00 மணி : பச்சை கிளி முத்துச்சரம்
9.00 மணி : நேசித்த நினைவுகள்
10.00 மணி : பக் ரு பக்

---

**காலை**
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

---

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பக்தி பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

---

**காலை**
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : மாதா மன்றாட்டு
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
11.00 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : நசரேத்துார்மரியா திரைப்படம்
2.00 மணி : நற்சிந்தனை
3.00 மணி : மறை வகுப்பு
4.00 மணி : நிதர்சனம்
5.00 மணி : பாடல்

---

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org